செங்கரும்பு... (C.N.A)

Regd. No. M. 4642 போன் நெ. 15

# திராவிடநாடு

5 - - - 56 ★ வார வெளியீடு ★ விலை 2 அணு



Best copy available.

★

[illegible]
"வாய்" திறந்து

★

நமது
கண்மணிகள்

★

கவிதை அரங்கம்

★

வெசேலியஸ்

★

# நமது கண்மணிகள்

"செச்சே! இதுகளா?", என்று நமதின மாணவர்களைக் குறித்து, 'அவர்கள்' எள்ளி நகையாடிதோர் காலம்! இன்றோ, பூட்டிய கூட்டின் கதவு திறக்கப்பட்டது போல பொலிவும் வலிவும் மிக்கவர்களாகி வருகிறார்கள் மாணவத் தோழர்கள்!! அதன் அரிய காட்சியொன்றை கடந்த 27-1-'56 அன்று காணும் வாய்ப்பு கிடைத்தது, எனக்கு. சென்னை வண்ணையம்பதிலே அமைந்திருக்கும் வெள்ளுடை வேந்தராம் தியாகராயரின் பெயரால் விளங்கும் கல்லூரியிலே, அருமையானதோர் கலை விழாவினை நடத்தி வருகின்றனர், மாணவர்கள். அதனைக் கண்டு களிக்க வேண்டுமென்று பேரார்வத்துடன் வந்து அழைத்தார், கல்லூரி விரிவுரையாளரான தோழர் அறிவழகன். கல்லூரிக்குச் சென்றதும, தலைவர் எம். கே. சண்முகனார் அவர்கள் இனிய முகம் காட்டி வரவேற்றார்! கல்லூரியின் வளர்ச்சியிலும், தமது மாணவர்களின் அறிவியல் திறனிலும் அவர் காட்டி வரும் அக்கரை மிகப் பெரிது!! சீர்கெட்டு வரும் கல்வித்துறைக்கு அவர்போன்ற நல்லவர்கள், அதிகமாகத் தேவை.

கலைவிழாவின் ஒருபகுதியாக அரியதோர் கண்காட்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கலங்கரை விளக்கம் சுற்றுவது எப்படி-ஓடும் ரயில்-மைசூர் பிருந்தாவனச் சோலை—அங்குள்ள அழகு நீர் ஊற்று—சிகிரெட் தரும் இயந்திரம்—முதலிய சிந்தனைக் காட்சிகளோடு, தாவர இயல், மிருக இயல், முதலிய அறிவுக் காட்சிகளையும் மிகவும் சிரமத்தோடு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதனை, எடுத்து விளக்கும் போது, நமது மாணவ மணிகளின் அகத்திலும் முகத்திலும் எவ்வளவு ஆனந்தம் வழிகிறது தெரியுமா! ஆகா, எதிர்காலத் திராவிடம் தகைமையுள்ள அறிஞர்களுக்காக ஏங்கவேண்டுவதில்லை—என்ற எண்ணமே பிறந்தது!!

* * *

மூ"படித்த மாணவர்கள், கலைத்துறையின் வலம் நாட்டின் நிலையை வளர்க்க முன் கரும் ஆர்வம் கண்டு பெருமைப்படுகிறேன். கலைத் துறையில், படித்தவர்கள் ஈடுப முன் வருவது நாட்டின் புது வாழ்வில் புதியதொரு கட்டமெனக் கருதுகிறேன்," என்று தியாகராயர் கல்லூரி திறந்த வெளி அரங்கில், அன்று மாலை நடைபெற்ற "வீரப்பாண்டியன்" எனும் நாடகத்துக்குத் தலைமை தாங்கிய அண்ணாதுரை குறிப்பிட்டார். நாடகம், கல்லூரி வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்டது! நல்ல காரியத்துக்கு, நமது மாணவ மணிகள் பாடுபடுகிறார்கள் என்றறியும் போது மகிழ்ச்சி இரட்டிப்பாகத் தானே செய்யும்? வாழ்க, தியாகர் கல்லூரி மாணவர்கள்! வாழ்க அவர்களைத் திறனுள்ளோராக்கும் ஆசிரியப் பெருந்தகையாளர்கள்!!

* * *

அறிவியல் துறையில் மட்டுமல்ல, தாய்நாட்டுக்கு வரும் அநீதிகளைத் துடைப்பதிலும் நமது மாணவ மணிகள் காட்டிடும் அக்கரை, அதிகம், மிகமிக அதிகம். இல்லையெனின், தமிழகத்துக்குத் துரோகம் இழைத்து டில்லியார் முடிவு வெளியிட்டதும் திறந்த கூட்டின் சிங்கங்களெனக் கிளம்புவார்களா? பெரியவர்களையே முந்திக் கொண்டு விட்டார்களே, அநீதியைக் கண்டிப்பதில்! சென்னையிலிருந்து, தூத்துக்குடி வரை 'பீர்மேடு, தேவிகுளம்', குறித்து அவர்கள் எழுப்பிய கண்டன முழக்கம் கேட்டது. அவைகளை உணரும் போது, 'வருங்கால உலகம்' தூங்காது — எனும் நம்பிக்கை வளர்கிறது, நமக்கு. ஒரு பக்கம் அறிவியல் துறைகள்! அதே சமயத்தில் தாயகப் பற்று!!—என்று, இரண்டையும் போற்றி வளர்த்துவர வேண்டும் மாணவர்கள். இதற்காக அதையோ, அல்லது அதற்காக இதையோ இழந்துவிட்டு வளரும் மாணவ உலகம் எதிர்காலத்துக்குப் பயன் படாது! கல்வி அறிவும், நாட்டுப் பற்றும் மிக்கவர்களாக மிளிர வேண்டும், நமது கண்மணிகள்.

* * *

திராவிட மாணவ முன்னேற்றக்கழக அமைப்பாளர்கள் 28-1-56 அன்று அண்ணாமலை நகரில் கூடி, சீரியதோர் முடிவைச் செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு கிளையாகத் தாங்கள் இயங்கவேண்டும் என்பதே! இந்த முடிவில் ஆச்சரியமும் இல்லை, புதுமையுமில்லை. ஏனெனில், நேற்றைய தினம் யார் யார் மாணவ கழகத்தின் தொண்டர்களாக யிருந்தார்களோ அவர்கள் தான் தி. மு. க. வின் முன்னணி வீரர்களாகயிருக்கிறார்கள்! அந்தப் பரம்பரையின் வாரிசுகள் தானே, திராவிட மாணவர்கள். அவர்களின் முடிவை வரவேற்கிறோம். அதே சமயத்தில், ஒன்றைக் கவன மூட்டுகிறோம்-தாயகத்தின் தாழ்ந்த நிலையை அகற்ற அவர்கள் பாடுபட வேண்டுவது அவசியம்! ஆனால், அதற்காக பிஞ்சில் பழுத்தவர்களாகிவிடக் கூடாது!! சகல துறைகளையும், கற்று அறியும் கல்லூரி வாழ்க்கையே செவ்வனே முடிக்க வேண்டும். ஏனெனில், எதிர்காலத் திராவிடத்துக்கு ஏராளமான அறிஞர்கள் தேவை!! அதை, மறக்கக்கூடாது, மாணவ மணிகள்,

★

## "நடிகன் குரல்"

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் வெளியிடப்படும் திங்கள் இதழான "நடிகன் குரல்" வரப்பெற்றோம். நடிக மணிகளின் நலம் பேணவும், அவர்தம் ஒற்றுமை வளர்ச்சிக்குப் பாடுபடவும் வந்துள்ள இந்த இதழின் பதிப்பாசிரியர் தோழர் எம். ஜி. ராமச்சந்திரன். பொறுப்பாசிரியர்களாகத் தோழர்கள் டி. கே. சண்முகமும், டி. வி. சுந்தரமும் உள்ளார்கள். இவர்களது உழைப்பும், பெருந்தன்மையும் நடிகனது குரலை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கிறோம். பொதுமக்கள் அறிய விரும்பும், பல சுவையான செய்திகளும், கட்டுரைகளும் இடம் பெற்றுள்ள இந்த ஏட்டின் விலை அணா 3, ஆண்டு சந்தா ரூ. 1—8—0 முகவரி நடிகன்குரல், சென்னை-4.

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 31

# மீண்டும் துக்ளக்!

**டில்லி, நமது சாம்ராஜ்யத் தலைநகராக இருக்கக் கூடாது—வேறு ஓர் இடம் பார்த்துவிட்டேன்—அது தான் 'மையமாக' இருக்கிறது — தேவகிரி—அந்த நகர் இனி, தௌலதாபாத் ஆகும், அதுவே இனி நமது தலைநகரம் —என்றான் முகமது துக்ளக்.**

டில்லி வேண்டாம்—இனி தௌலதாபாத் தலைநகராகும்—சர்க்கார் அலுவலகங்கள் இனி அங்கு தான், என்று கூறினான் துக்ளக்! இல்லை! டில்லியிலிருந்த மக்களை எல்லாம், கிளம்பச் சொன்னானும், தேவகிரி நோக்கி!! தலைமுறை தலைமுறையாக நிலபுலம் பெற்றும், தொழில் நடத்தியும் அங்கு வாழ்ந்து வந்தவர்களை. குடும்பம் குடும்பமாக, சொத்துக்களை விட்டுவிட்டு, பயணப்படச் சொன்னான்—புதிய தலைநகர் நோக்கி.

சாம்ராஜ்யத்துக்குப் புதிய தலைநகர் அமைத்துக் கொள்ளட்டும் — தலைநகரிலேயே இருந்தாக வேண்டும் என்று நிலைகொண்டோர் அங்கு செல்லட்டும், ஒட்டகம் ஓட்டிப் பிழைப்போனும் பண்டகசாலை நடத்துவோனும், தோட்டவேலை செய்பவனும் தோல் பதனிட்டுப் பிழைப்போனும், நெசவுக்காரனும் பிறரும் எதற்காகத் தேவகிரி செல்ல வேண்டும் — வீடுவாசலை விட்டுவிட்டு, தொழிலை இழந்துவிட்டு! துக்ளக் இது பற்றி எண்ணவில்லை. பிற எந்தப் பாதுஷாவுக்கும் தோன்றாத ஓர் உண்மையைத் தன்னால் கண்டுபிடிக்க முடிந்தது என்று எண்ணி இறுமாந்து கிடந்தான்.

நமது புதிய தலைநகரம் கிளம்புக! என்று பறை அறைந்தனர்—பதைத்த மக்களைப் படையினர் மந்தைபோல் ஓட்டிச்சென்றனர், புதிய தலைநகருக்கு! வரமறுப்போனுக்கு இடியும் இடரும்; ஒளிந்து கொள்வோன் தேடிப்பிடித்து இழுத்து வரப்பட்டான். குழந்தை குட்டிகளுடன் தாய்மார்கள், தள்ளாடித் தவிக்கும் கிழவர்கள், பக்கிரிகளைக் கூட விடவில்லையாம்—அனைவரும் துரத்தப்படுகின்றனர் தௌலதாபாத்நகருக்கு!

ஒரு நொண்டியும் மற்றோர் குருடனும் மட்டுமே, டில்லியில் தங்கினராம்!

இவை எல்லாம் மிகைபடக் கூறப்பட்டவை என்பாருளர் என்றாலும் துக்ளக், தலைநகர்மாற்றம், தான்தோன்றித் தர்பார் என்ற உண்மையை எல்லா வரலாற்று ஏடுகளும் காட்டுகின்றன!

நாற்பது நாட்கள், நடந்து சென்றனர். பித்துக் கொள்கை கொண்டவனுடைய வற்புறுத்தலால், வழியேசொல்லொணா இடர்ப்பாடுகள்; நோய் நொடியால் தாக்குண்டவர் பலர்; நொந்துபோயினர் பலர்; கடைசியாக, தேவகிரி சென்றனர்; முற்றிலும் தமக்குப் பழக்கமற்ற இடம்; சூழ இருந்தவர் வேற்று மதத்தினர்; அயலூர் என்ற எண்ணம் அகன்றபாடில்லை, தொழில்இல்லை, துயரம் தாக்கிற்று; பஞ்சம், பசி, நோய்! பல்வேறு கொடுமைகளுக்காளாகி, ஐயோ! சொந்த இடத்தை இழந்துவிட்டு, இங்கு வந்து சோற்றுக்கு அலைகிறோமே என்று கதறினர்.

துக்ளக் செவியில் இந்த அழுகுரல் வீழ்ந்தது. தான் வகுத்த ஆகாததிட்டத்தால் வந்துற்ற அவதியைக்கண்டான், பரிதாபம் கொண்டான்; ஆயின் அவன் செய்ததென்ன? தேவகிரிவந்து தேம்பித் தவிக்கும் மக்களுக்கு இதம் தரும் திட்டமளித்தானா? அதுதான்இல்லை! அன்புள்ள குடிமக்களே! டில்லியை விட்டு, தேவகிரி வந்ததால் உமக்கெல்லாம் பெருந்தொல்லை, எனக்கேள்வியுற்றுவருந்துகிறேன்எனவே அனைவரும் மீண்டும் டில்லி வருக—என்று உத்தரவிட்டான்!! புதிய உத்தரவு, மீண்டுமோர் வேதனை தரும் பயணத்தில் மக்களைத் தள்ளுகிறதே என்ற அறிவற்று!!

பாதுஷாக்கள் காலத்துப்போக்கு, பண்டிதர் காலத்திலும் இருக்கிறது—சிற்சில மாறுதல்களுடன்.

கற்றறிவாளர்—ஆய்ந்தறிவதில் வல்லுநர்—அச்சம் தயை தாட்சண்யத்துக்குத் துளியும் கட்டுப்பட்டு நீதித்துலாக்கோலை எப்பக்கமும் ஒருதுளியும் சாய்த்திடமாட்டார்கள் என்றெல்லாம், நாட்டவருக்குக் கூறித்தான் ராஜ்யச் சீரமைப்புக் கமிஷனில் மூவர் நியமிக்கப்பட்டனர்.

அவர்கள் போகாதஊரில்லை, கலந்துரையாடாத தலைவரில்லை, காணாத வரலாற்றுச் சுவடிகளில்லை, சேகரிக்காத புள்ளி விவரங்களில்லை—ஆர அமர யோசித்தனர், தமது ஆய்வுரையை அளித்தனர்.

அதிலே தட்சிணப் பிரதேசமோ, பீகார்—வங்காள இணைப்போ, ஐந்துமண்டலமோ, எட்டு அரசுகளோ கிடையாது.

அவர்கள், பண்டிதரிடம்கூடப் பேசினர். அவரும் நாடுகளையும் முடிபோடும் திட்டம் குறித்துப் பேசவில்லை.

எவருக்கும் அவ்விதமானதோர் எண்ணம் எழவில்லை.

நாடு, இந்தக் கமிஷனின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும், ஏனெனில், நன்கு ஆராய்ந்து, சகல பிரச்சினைகளும் பரிசீலிக்கப்பட்டு 'முடிவு' தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று பண்டிதர் பேசினார்; அவருடைய பேச்சை, மற்றத்தலைவர்கள் ஒலிபரப்பி மகிழ்ந்தனர். அப்போதும் இந்த தட்சிணப் பிரதேசம், பேசப்படவில்லை.

எல்லை குறித்த சிக்கல்கள் கிளம்பின, எனக்கு, உனக்கு என்ற பேச்சு, மாச்சரியத்தை மூட்டிற்று

அப்போதும் இந்தத் தொல்லேயே வேண்டாம்; 'இரண்டு மூன்று' ஒன்ருக்கி, புதிய புதிய 'பிரதேசம், காண்போம் என்று பண்டிதர் பேசவில்லை —பஞ்சாயத்து பேசினர் — ஒருவருக்கொருவர் 'பரஸ்பரம்' வேண்டுமென்று நல்லுரை கூறினர் — தட்சிணப் பிரதேசம் பற்றிப் பேசவில்லை.

டில்லி, பாராளுமன்றம் கூடிற்று' சீரமைப்பாளரின் திட்டமே சிலாக்கியமானது, முடிவானது என்று கூறிவிட்டது.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடிற்று, பஞ்சாப், விசால ஆந்திரம், பெல்லாரி, எனும் மூன்று பிரச்சினைகள் பற்றி மட்டுமே, சிறிது யோசித்து முடிவு கட்ட வேண்டி இருக்கிறது. பிறவற்றை, ஏற்றுக்கொண்டுவிட்டோம், நாடு ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்று 'தீர்ப்பு'கூறிவிட்டது.

இந்தத் 'தீர்ப்பு' அளிக்கப்பட்டு ஆறுமணி நேரமாவதற்குள், இதற்கு முற்றிலும் மாறுபட்டதும், மூவர் கமிட்டி கூருததும், அக்கமிட்டியிடம் எந்த அரசியல் தலைவரோ, பொருளாதார நிபுணரோ, நிர்வாக அனுபவமுள்ளவரோ, நேருவோ, கூருத புதியதோர் திட்டமாக, வங்கம்—பீகார் இணைந்து ஓரரசாவது என்று, அவ்விரு ராஜ்ய முதல்வர்களும் அறிக்கை விட்டனர்!

அந்த அறிக்கையை, உடனே பண்டிதர் ஆதரித்து, அற்புதம்! அற்புதம்! இதே முறையில் தட்சிணப் பிரதேசமும் அமைவது நல்லது—என் விருப்பம் என்ருர்.

ஆகா! அதற்கென்ன!! அதுதான் சரி! அதுதான் தக்க பரிகாரம் என்று பண்டிதரின் பார்வையில் எப்போதும் தம்மை வைத்துக்கொள்வோர் பேசலாயினர்.

இவ்விதம் இவர்களும், பண்டிதரும் பேசும் போது, நாடு முழுதும் சுற்றி 'கமிஷன்' தயாரித்த அறிக்கையைக், குப்பைக் கூடைக்குள் போடுவதா, ஏன் வீண் செலவிட்டு, கமிஷன் அமைத்தோம் அவர்கள் கண்டறிந்த உண்மைகளை நாமே வாயாரப் போற்றினேமே, அந்த யோசனைகளிலே, இந்தக் 'கட்டாயக் கூட்டு'த் திட்டம் கடுகளவும் காணப்பட வில்லையே, நாமே அந்தக் கமிஷனிடம் இதுபற்றிப் பேசியதே இல்லையே; நாட்டுக்கு அந்தக் கமிஷன் தந்த சீரமைப்பே—முடிவானது, சிலாக்கியமானது, விவேகமானது, என்றெல்லாம் கூறி விட்டோமே, இப்போது முற்றிலும் முரணை, கமிஷன் முகத்தில் கரி பூசத்தக்க, நாமே சொன்னதை எல்லாம் நாமே மறுக்கத்தக்கவிதமாகப் பேசுகிருேமே. நமது போக்கு பற்றியும் நோக்கம் குறித்தும், நிலைபற்றியும் மக்கள் என்ன தான் எண்ணுவார்கள், என்பது பற்றி, பண்டிதரும் அவருடைய பஜனைக் கோஷ்டியும் துளியும் எண்ணிப் பார்க்கவில்லை. தான்தோன்றித் தர்பார் நடக்கிறது.

துக்ளக் இதே போக்கில் தான் நடந்துகொண்டான்.

பொட்டி சீராமுலுவின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது, இறப்பதற்கு 36 மணி நேரத்துக்கு முன்பு, பார்லிமெண்ட் ஆர்ப்பாட்டமாகத் தீர்மானம் தெரிவித்தது, ஆந்திர அரசு அமைப்பதற்காக இப்படி வற்புறுத்தினல், இணங்கப்போவதில்லை, பயங்காட்டிப் பணியவைக்கலாம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம், பொட்டி இறந்தாலென்ன, பிழைத்தாலென்ன, ஒரு பொட்டிக்காக, எமது மதிப்பை மாய்த்துக் கொள்வோமா, மண்டியிடுவோமா? என்று கொக்கரித்தனர்.

பொட்டி இறந்த 48 மணி நேரத்தில், ஆர்ப்பரித்துக் கிடந்த டில்லி, ஆந்திர அரசு அமைத்துத் தருகிறேன் என்று குழையலாயிற்று!!

ஆந்திர அரசு அமைத்த பிறகு, மொழிவழி அரசு மற்றவருக்கு மறுக்கப்படுகிறது.

துக்ளக் போக்கிலே தான், திட்டங்கள், தீர்ப்புகள், தரப்படுகின்றன.

மக்கள் இதனுல் எத்துணை வேதனையில் ஆழ்த்தப் படுகிருர்கள்—வெட்டி மடிபவர்களும், வெந்தழலில் வீழ்பவர்களும், துப்பாக்கிக்குப் பலியாகிறவர்களும் துயரக்கடலில் ஆழ்பவர்களுமாக மக்களைத் தவிக்கவிட்டு, உண்டது ஜீரணமாகாததால் வாந்தி எடுத்தல் போல, உள்ளத்திலே எந்தக்கருத்துக்கும் பொருத்தமான இடமளிக்காமல், இதற்கு அதுமருந்து, அதற்கு இது பரிகாரம் என்ற போக்கில் நடந்து கொள்கிறது, டில்லி.

துக்ளக் மீண்டும் டில்லியில் தர்பார் நடத்துகிருர். அறுநூறு ஆண்டுகளுக்குப் பிறகு!! அந்தோ! அந்தோ!!

★

## அறுவடை

'அறுவடை' தொடர்சித்திரம் அடுத்த இதழில், வரும்.

ஆசிரியர்.

## சிறிதும் பெரிதும்!

மைகல் ஆங்கிலோ என்பவர் உலகப் புகழ்பெற்ற இத்தாலி நாட்டுச் சிற்பி. ஒரு நாள் சிற்பி தமது சிற்பக்கூடத்தில் ஆழ்ந்த கவனத்துடன் வேலை செய்து கொண்டிருக்கையில் அவருடைய நண்பர் ஒருவர் அங்கு வந்தார். ஆங்கிலோ அழகிய சிலை ஒன்றை முடிக்கும் தருவாயில் இருந்தார். நண்பர் அந்த அரிய சிலையை பார்த்துவிட்டு சில நாட்கள் கழித்துத் திரும்பவும் வருவதாகச் சொல்லிச் சென்ருர். சில வாரங்களுக்குப் பின்பு நண்பர் கலைக் கூடத்தில்தோன்றினர். சிற்பி அதே சிலையைச் செம்மைப்படுத்திக் கொண்டிருந்தார். நண்பர் சிற்பியை நோக்கி "நான் அன்று பார்த்த சிலைக்கும, இன்று பார்க்கும் உருவத்திற்கும் வேறுபாடே இல்லை; அப்படியே காட்சியளிக்கிறதே; நீர் அதன் பின்பு சிலையைத் தொடவேயில்லைபோலும்!" என்ருர். அதற்குச் சிற்பி, "நண்பரே நீர் நினைப்பதும் சொல்வதும் தவறு. அன்றுமுதல் இன்று வரை நான் ஓயாது சிலையைத் திருத்தி வந்திருக்கிறேன். அன்று முதலாகச் சிலையின் கன்னத்தைப் பாடுபட்டுச் சீர்செய்தேன்; கண் குழியை ஆழமாக்கினேன்; கண் புருவத்தை மாற்றியமைத்தேன்; உதடுகட்குப் புதிய கோடுகள் அமைத்தேன்" என்று கூறலானர். "ஆமாம், ஆனல் இவை எல்லாம் மிக அற்பமான சீர்திருத்தங்கள் தானே" என்று கேட்டார் நண்பர். "ஆம், இவை அற்பமான காரியங்கள்தான்; ஆனல் இந்த அற்பமான சீர்திருத்தங்களே எனது சிலையைப் பரிபூரணப்படுத்தி எனது திறமைக்கும் புகழுக்கும் சாட்சி பகர்கின்றன என்பதை நீர் மறந்துவிட்டீர்" ஆம்! அவர்தம் அரியமொழியில் தவறென்ன இருக்கிறது? அண்ணல் யானை அணிதேர்ப் புரவி மன்னருடன் இருக்க மகத்தான இடம்தரும் மாபெரும் ஆலமரம் கிளைத்தெழுவது சின்னஞ் சிறியதோர் விதையிலிருந்துதானே?

# முத்தான வாய் திறந்து.........

தம்பி,

பொதுக்குழு, நமது பொதுச் செயலாளர் ஈடுபட்டுள்ள சர்வ கட்சிக்கூட்டணி முயற்சிக்கு ஆதரவளித்துத் தீர்மானம் நிறைவேற்றி விட்டது—எனவே நாம் அனைவரும் சர்வகட்சிக் கூட்டணி மேற்கொண்டுள்ள 'பொது வேலை நிறுத்த' நடவடிக்கையை வெற்றிகரமானதாக்கிக் காட்டும் பெரும் பொறுப்பை மேற்கொண்டு விட்டோம் என்பது பொருளாகிறது.

பொதுக்குழுவில், இது பற்றிய விளக்க உரையாற்றினர் நமது நாவலர்; பிற அமைப்புகளிலே வாய் பிளந்துகொண்டு கேட்பவர்கள், கொட்டாவி விட்டபடி கேட்பவர்கள், இருக்கிறார்கள்; இவ்வளவு என்ன, மாதாமாதம் சுளைசுளையாகப் பணம் பெற்றுக்கொண்டு பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ள சட்டசபை உறுப்பினர்களிலேயே பலபேர், முக்கியமான விவாதம் நடைபெறும்போது, மன்றத்தில் இருப்பதில்லை, வெளியே மரத்தடியில் நின்று கொண்டு, காணவந்தவர்களிடம் கதை பேசிக்கொண்டும் 'காபி' விடுதியில் உட்கார்ந்து கொண்டும் இருப்பதாக அவ்வப்போது 'தகவல்' வெளி வருகிறதே! உள்ளே, பலகோடி மக்களின் வாழ்வினைப் பாதிக்கக் கூடிய 'பிரச்சினை' பேசப்பட்டு வருகிறபோது, நில உடைமையின் உரிமை எந்த வகையிலே கட்டுப் படுத்தப்படுவது, எவ்வளவு அளவு இருக்கலாம், என்பது பற்றிப் பேசப்பட்டு வருகிறபோது, ஆட்சி மன்றத்தில் அமர்ந்திருந்து அக்கறையுடன் பிரச்சினையை அலசிப் பார்த்து அறிவுரை அளித்திட வேண்டியவர்கள், அந்தக் காரியம் செய்வதாக மக்களிடம் வாக்களித்து 'ஓட்டுப்' பெற்றவர்கள், காப்பிக் கொட்டை "கேணசர் மார்க்கா, காளி மார்க்கா, பவுடரா பசுவின் பாலா என்பன போன்றவை பற்றிப் பேசிச் சுவை காணுகின்றனர்; மணி அடிக்குமாம் 'ஓட்' எடுக்கிறார்கள் என்பதை அறிவிக்க; இவர்கள் அப்போதுதான், அவசர அவசரமாக ஓடுகிறார்களாம் உள்ளே! இந்த இலட்சணத்தில் நடைபெறுகிறது. சட்டசபைகளிலே இது! கட்சிக் கூட்டங்களிலோ, சொல்லத் தேவையில்லை.

இந்த இழவெல்லாம் நமக்கென்ன புரிகிறது!—என்ற போக்கினரே அதிகம்.


நமது பொதுக்குழுவில் அங்ஙனமில்லை.

காரம் சற்று அதிகம்—எப்போதும் எனக்கு இனிப்பு அதிகமாக இருப்பதைவிடக் காரம் சற்று அதிகம் இருப்பது பிடித்தம் தான்—எனவே நமது பொதுக்குழுவில் 'காரம்' சிறிதளவு அதிகமாக இருப்பது காணும்போது களிப்பாகவே இருக்கிறது, ஆனால் காரம் புளிப்பு கசப்பு உவர்ப்பு எனும் எதுவும் அளவுடன் இருந்தால், சுவை கெடாது, பண்டம் பாழாகாது, பக்குவம் இருக்கும், பயனும் மிகுதி! எனினும் இவை சிறிதளவு அதிகமானாலும் பரவாயில்லை, உப்பு மட்டும் அதிகமாகி விடாமல் பார்த்துக் கொண்டால் போதும்!

நமது பொதுக்குழுவில் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றவர்கள் அனைவரும், பிரச்சினைகள் குறித்து அதிகமான அளவு அக்கறை காட்டுவது, உள்ளபடி ஜனநாயக வளர்ச்சிக்குத் தேவையாகிறது; நமக்கென்ன? அது என்னமோ? புரியவில்லையே! — என்ற அலட்சியப் போக்குதான், ஜனநாயகத்துக்குப் பேராபத்து விளைவிக்கும்; வேண்டிய அளவைவிடச் சிறிது அதிகமாகவே காரம் கூட்டப்பட்டாலுங்கூடப் பரவாயில்லை, அக்கறை கொள்கிறார்கள் என்றால், அது வரவேற்கத் தக்கது.

எந்தப் பிரச்சினையிலும், நமது 'பொதுக்குழு' உறுப்பினர்கள் மிகுந்த அளவு அக்கறை காட்ட வேண்டியது அவசியமாகிறது என்று நான் எண்ணுவதற்குக் காரணம், பொதுக்குழுவில் நிறைவேற்றப்படும் எந்தத் தீர்மானமும் நம் அனைவரையும் கட்டுப்படுத்துவதால், பொதுக்குழு காட்டும் வழியில் நாட்டை நடத்திச் செல்லும் பொறுப்பு நம் அனைவருக்கும் இருப்பதால், பேசப்படும் பிரச்சினைகள் குறித்தும், எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கை பற்றியும், தீட்டிடும் தீர்மானங்கள் குறித்தும், அளித்திடும் தீர்ப்புப் பற்றியும், நடத்தப்படும் ஆய்வுரைகள் பற்றியும், மிகமிக அக்கறை காட்டியாக வேண்டும்—பிரச்சினையின் சகல கோணங்களையும் கண்டறிய வேண்டும். 'எல்லாம் அவருக்குத் தெரியும்' என்ற எண்ணமும் கூடாது, "எதுதான் நமக்குப் புரிகிறது?" என்ற மனப்போக்கும் ஆகாது; பொதுக்குழுவில் மேற்கொள்ளப்படுகிற எல்லா நடவடிக்கைகளும், நமது பொறுப்பையும் ஆற்றலையும் நம்பியே விடப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து நடந்து கொள்ளவேண்டும்; ஜனநாயகத்தில் அப்போதுதான், தரம், திறம், பக்குவம் பலன் கிடைக்கிறது!

**நமது வயலிலே விளையும் செந்நெல்லாயினும் நாமே அல்லவா**



**புடைத்து எடுக்கிறோம்—பதர்போகவும், மணிகிடைக்கவும்! நாம் பெற்ற செல்வமாயினும் நாமே அல்லவா, குளிப்பாட்டி அழுக்கு நீக்கி, ஆடை அணி புனைந்து பிறகு கொஞ்சுகிறோம். அதுபோலத்தான், தம்பி, நமது பொதுக்குழுவில் காரியமாற்றுவதற்கான வேலை முறை பற்றிக் கலந்துரையாடும்போது நாம் அக்கரை காட்டவேண்டும்.**

*தம்பி! நான் ஜஸ்டிஸ் கட்சிக் காலத்திலிருந்து, இப்படிப்பட்ட குழுக்களில் அமர்ந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்—பெருந்*

## ‘ஜஸ்டிஸ்’ படிக்காத

*தலைவர்கள், அருகே நெருங்கவே முடியாத நிலையினர், அரண்மனை வாசிகள் ஆகியோர் அமர்ந்து அரசோச்சிய அவைகளிலே, ஒப்பி என்னையும் உடனிருக்கச் செய்திருக்கிறார்கள் – பொப்பிலியும் செட்டிநாட்டு (அப்போது) குமாரராசாவும், சர் முகமது உஸ்மானும் அவர்போன்ற வேறு பல கனவான்களும் வீற்றிருந்த குழுக்களில், (அப்போது) அரும்பு மீசையும், கல்லூரி முலாமும்கொண்ட நான் அமர்ந்திருக்கிறேன் — அப்போதெல்லாம், கூடத்தில் நடைபெறும் நிகழ்ச்சி, மறு அறையில் உள்ளவர்களுக்குக்கூடத் தெரியாது—கேட்காது—அவ்வளவு மெல்லிய குரலில், விட்டுவிட்டு வார்த்தைகள் வெளிவரும், அதுவும் ஒருவர் இருவரிடமிருந்து; மற்றையோரெல்லாம், இவ்வளவு செல்வவான்கள் நமது முகாமில் இருக்கும்போது தேர்தலைப்பற்றிய பயமென்ன, என்றுஎண்ணிக்கொண்டு இருக்கவேண்டியதுதான்.*

*உறுப்பினர்களிலே பலருக்கு, அந்தக் குழுவிலே இடம் பெற்றது, அந்தஸ்தின் அறிகுறியே தவிர, பணியாற்றும் வாய்ப்பு என்றோ, பொறுப்பான செயலென்றோ, எண்ணம் இருந்ததில்லை.*

**போடியும் போலாவரமும், வெங்கடகிரியும் வடபாதியும், காளஹஸ்தியும் கார்வேட்டியும், சிங்கம்பட்டியும், உத்தமபாளையமும், பொப்பிலியும் பிறவுமாக வீற்றிருக்கும் இடத்தில், பணியாற்றும் வாய்ப்பு, பொறுப்பேற்கும் பேறு என்று எண்ணம் இருக்க முடியும்!** *நான் தம்பி! அப்போது ஜஸ்டிஸ் கட்சிக்குப் புகுத்தப்பட்ட ‘புது இரத்தம்’—இளவெட்டு —ஜஸ்டிஸ் கட்சி அந்தஸ்த்தை இழந்து வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு என்ற அளவிலே, அங்கு சீமான்களால் அனுமதிக்கப்பட்டிருந்தேன்; அந்த நிலை கிடைத்ததற்கும் காரணம், ஜஸ்டிஸ் கட்சிக்குச் சுயமரியாதை இயக்கம் துணை புரிந்தாக வேண்டிய கட்டம் பிறந்ததுதான்.*

*தம்பி! அந்தப் பழைய நாளை நான் நினைவுபடுத்திக் கொண்டதற்குக் காரணம், அந்த நாட்களிலே, கட்சியின் கனவான்கள், கட்சிக்கு நீங்காத தொடர்பு கொண்ட பிரச்சினைகளிலே எந்த அளவுக்கு அக்கரை கொண்டவர்கள் என்ற வேதனை தரும் வேடிக்கையை உனக்குக் கூறுவதற்குத்தான்!*

*அப்போது, அரசியலில் மிகச் சூடான பிரச்சினை, திலகர் சுயராஜ்ய நிதி என்ற பேரால் திரட்டப்பட்ட ஒரு கோடி ரூபாய், காங்கிரஸ்காரர்களால் பாழாக்கப்பட்ட பயங்கரச் சம்பவம்தான்.*

டி. ஏ. வி. நாதன் எனும் எனது நண்பரும், ‘சண்டே அப்சர்வர்’ ஆசிரியரும் என்னை ‘ஜஸ்டிஸ் கட்சிக்கு’ இழுத்துச்சென்றவருமான பி. பாலசுப்பிரமணியமும், ஜஸ்டிஸ் இதழில், வெளுத்து வாங்கினார்கள், திலகர் சுயராஜ்யநிதி மோசடிபற்றி;

கடப்பையில், ஜஸ்டிஸ் மாநாடு! நான் அதிலே பேசினேன் — திலகர் நிதி மோசடி குறித்து—அப்போது, நான்தான் சொன்னேனே, ‘அரும்பு

## ஜஸ்டிஸ் தலைவர்!

*மீசை’ என்று—அதற்கேற்றவகையில், ஆங்கிலத்தில்! பெருந்தலைவர்கள், வழக்கப்படிகைக்கடியாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டனர்—முகம் சுளித்தபடிஅல்ல; ஆங்கிலத்துக்கு மதிப்பளிக்கவேண்டுமல்லவா, அதனால்; கேட்டுக்கொண்டிருந்தனர்.*

*ஒருமணி நேரம்—ஆத்திரம் தீரப் பேசி முடித்தேன்—அங்கே கூடியிருந்தவர்கள் அவ்வளவு பேரும், என் எதிரிகள்போலவும், அவர்கள் யாவரும் திலகர்நிதி மோசடியே நடைபெறவில்லை, என்று என்னிடம் வாதாடக் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நிற்பதுபோலவும், எண்ணிக்கொண்டு பேசுகிறேன்—பழுப்பேறாத மிளகாய், அப்போது, நான், அதனால்!*

*தேனீர் விருந்துக்காகக் கலந்து சென்றோம்—நான் கற்பனைக் காற்றில் மிதக்கிறேன்—இனிப் பரவாயில்லை—திலகர் நிதி மோசடிபற்றி நாடே சீறி எழும் என்று எண்ணியபடி—ஒரு தலைவர், என் நன்மதிப்பினைப் பெற்றவர்—முதுகில் என்னைத் தட்டிக்கொடுத்தபடி, தனியே அழைத்துச்சென்று, “அண்ணாத்துரை! இதென்ன ஏதேதோ பேசி விட்டாயே! உன் ஆங்கிலநடை அழகை நான் ஒப்புக்கொள்ள முடியும். ஆனால் நீ பேசிய அண்டப்புளுகுகளை எப்படி ஏற்றுக்கொள்ளுவேன்? இப்படி எதற்காகப் பேசினாய்?” என்று கேட்டார்.*

*நானோ, தம்பி! நாட்டு மக்களுக்கு ஒரு பேருண்மையை விளக்கிவிட்டோம், காங்கிரஸ் கட்சியினர்செய்த ஒரு கயமைத்தனத்தை அம்பலப்படுத்திவிட்டோம் என்ற பூரிப்பில் ‘ராஜ நடை’ போட்டுக் கொண்டு செல்கிறேன், இந்தப் பெரியவரோ, அண்டப்புளுகு பேசுவது அழகா என்று என்னைக்கேட்கிறார். என் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை எண்ணிப்பார்.*

*நான், கூச்சத்துடன் ஆனால் துணிவினைத் தருவித்தபடி, திலகர் நிதி மோசடிபற்றி அவரிடம்விளக்கலானேன்.*

**நான், அவருக்கு! சாமான்யன்—பிரமுகருக்கு!! தொண்டன்—தலைவருக்கு!!**

*அப்படியா? உண்மையாகவா? ஒரு கோடியா? பாழாகிவிட்டதா? என்று மேலும் மேலும் ஆச்சரியத்தால் தாக்குண்ட நிலையில் கேட்டார் அவர் — நான் திகைத்துப் போனேன். ஆனால் தம்பி! கடைசியாக என்னைத் திணறவைத்தது அது அல்ல.*

*“அதென்ன பெரியவரே! இதெல்லாம் தெரியாது என்கிறீரே? பத்துக் கட்டுரைகள் வெளிவந்தனவே இது குறித்து, நம் ‘ஜஸ்டிஸ்’ பத்திரிகையில் என்றேன் நான்.*


(15-ம் பக்கம் பார்க்க)



அந்தக் காளையை இரு நூறு ரூபாய் கொடுத்து அவன் வாங்கினபோது, கிராமத்துப் பெரியவர்கள், அவன் 'செட்டாக'க் குடித்தனம் செய்து, பணம் மிச்சம் பிடித்து, நல்ல காளை வாங்கினான் என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர். வேலை வெட்டியைக் கவனிக்காமல் இருக்கும் உழவர்களையும், கிடைப்பதைக் கண்மூடித்தனமாகச் செலவிடுபவர்களையும், கிராமத்துப் பெரியவர்கள், கண்டித்துப் புத்திமதி கூறும்போது, சின்னப்பனைதான் உதாரணம் காட்டிப் பேசுவார்கள். அவன் புத்திசாலி, கெட்டிக்காரன், வீண் ஜோலிக்குப் போகமாட்டான், சளைக்காமல் உழைக்கிறான், வீண் செலவு செய்யாமல் மிச்சம் பிடிக்கிறான், அதனாலேதான் அவன் இப்போது நல்ல காளை வாங்க முடிந்தது; சப்பைகளை வைத்துக்கொண்டே இவ்வளவு நன்றாகப் பாடுபட்டவனிடம் இப்போது அருமையான 'ஜோடி' இருக்கிறது; இன்னும் நல்ல உழைப்பும், அதற்கான பயனும் கிடைக்கும் என்று கூறினர்.

சின்னப்பன், சாது, உழைப்பாளி, செலவாளி அல்ல, அவை யாவும் உண்மை. அவன் வாங்கி வந்த காளையும் சிலாக்கியமானதுதான், இருநூறு ரூபாய் கொடுத்துத்தான் வாங்கினான்; அதுவும் உண்மைதான்—ஆனால் பணம் மிச்சம் பிடித்து, அந்தக் காளையை அவன் வாங்கினதாகச் சொன்னார்களே, அதுமட்டும் முழு உண்மையல்ல—விவரம் அறியாமல், கிராமத்துக் கிழவர்கள் அப்படிச் சொல்லிக் கொண்டனர் — சின்னப்பன் அதை மறுக்கவில்லை, காரணம் அப்போதைக்கு அவனுக்கு அந்தவிதமான பேச்சு பரவுவதிலே ஒருவிதமான இலாபம் இருந்தது — அதற்குக் காரணம், சின்னப்பன் மகள் செங்கரும்பு.

செங்கரும்புக்குத் திருமண வயது—அதாவது கிராமத்துப் பெரியவர்கள் "ஏண்டா, சின்னப்பா! காடு கழனி வேலையையே கவனித்துக் கொண்டிருந்தால் போதுமா? வயசுக்கு வந்த பெண்ணு இருக்குதே, அதுக்குக் காலா காலத்திலே ஒரு கண்ணாலம் செய்ய வேண்டாமா, அதற்கான வேலையைக் கவனிக்காமல், பொழுதை ஓட்டுகிறாயே நல்லதா?" என்று சின்னப்பனை நச்சரிக்க ஆரம்பித்து வருஷம் இரண்டாகி விட்டது. எவ்வளவு காலத்துக்கு, இதுக்குள்ளே என்ன? அதுக்கென்ன பார்க்கலாம்! நானும் தான் யோசிக்கிறேன் — என்று கூறிக்கொண்டிருப்பது. சின்னப்பன், தன் பெண் கலியாண விஷயமாகக் கவனம் செலுத்தினான்; அப்போதுதான் அவனுக்கு ஒரு ஜதை நல்ல காளையாவது இருந்தால் தானே, பார்க்கிறவர்களுக்கு ஒரு மதிப்பு இருக்கும் என்ற நினைப்பு வந்தது, அதனாலேயே அவன் மிச்சம் பிடித்து வைத்திருந்த 150 ரூபாயுடன் ஐம்பது ரூபாய் கடன் வாங்கி, அந்தக் காளையைக் கொண்டுவந்தான்.



"ரொம்ப அதிகமாச் சொல்றிங்க அண்ணேன்" என்று சின்னப்பன் சொன்னபோது, "உன்னண்டை சொல்வதிலே என்ன சின்னப்பா குத்தம், இதை நான் இப்ப அறுவது ரூபா தள்ளிக் கொடுக்கறேன்—என் கஷ்டகாலத்தாலே கொடுக்கறேன்—நீ கொடுக்கற இரண்டுநூறும், சாமி சாட்சியா, கடன் கட்டத்தான், என் கையிலே சல்லிக் காசுகூட தங்கப் போறதில்லை" என்று நல்லண்ணன் சொன்னான்; அது பொய்யல்ல. கிராமத்துக்காரருக்குக் கடன் கொடுத்து, கண்டிப்புடன் வட்டியும் அசலும் தீர்த்து வாங்குவதிலே அனுபவமிக்கவர் அருணாசலம்—அவரிடம்தான் சின்னப்பனும் கடன் வாங்கினான்—ஏற்பாடு செய்து கொடுத்ததும் நல்லண்ணன்தான்—அப்படி ஏற்பாடு செய்யும்படி யோசனை சொன்னவர் அருணாசலமே தான்!

சின்னப்பனிடம் சீட்டு எழுதி வாங்கிக்கொண்டு, கடன் கொடுத்தார் அருணாசலம், அதை அவன் வாங்கி, தான் கொண்டுவந்திருந்த பணத்தோடு சேர்த்து நல்லண்ணனிடம் கொடுத்தான், அவனிடமிருந்து அருணாசலம் பணத்தை வாங்கிக்கொண்டு, தன் வீட்டுப் புறக்கடையிலே கொண்டுவந்து கட்டிவைக்கப்பட்டிருந்த கருப்பனை அவிழ்த்துக்கொண்டு போகும்படி, சின்னப்பனுக்கு அனுமதி அளித்தார்; அந்த அழகான காளையைக் கண்டவர்கள், சின்னப்பனுடைய 'செட்டான' குடித்தனத்தைப் புகழ்ந்தார்கள். பெண் பார்க்க வருகிறவர்களுடைய காதிலே 'இந்த விஷயம்' விழுவது நல்லது என்று சின்னப்பன் எண்ணிக் கொண்டான்.

கரும்பு காசு கொடுக்கட்டும், கலியாணத்தைப் பற்றி கவனிக்கலாம்; சின்னப்பன் மக 'செக்கச் செவேலுனு' இருக்கிறான்னு கேள்வி, ரொம்பத் துடியான பொண்ணுன்

னும் பேசிக்கொள்றாங்க, சின்னப்பன் வளமான சம்சாரியாம், போன மாதம் கூட இருநூறு கொடுத்து காளை வாங்கினானாம்; இரண்டு ஏக்கரா சொந்தமும், மூணு குத்தகையுமா இருக்கிறதாகச் சொல்கிறாங்க, ஒரு பிள்ளை ஒரு பெண்ணு — பிள்ளை எங்கேயோ பட்டணத்து மில்லிலே 'பாரா'க்காரன் இருக்கிறானாம்—மொத்தத்திலே நமக்கு ஏத்த சம்பந்தம்தான், ஆனா நமக்கும் நாலுகாசு வேணுமே, இந்தத் தடவை கரும்புப் பயிரு, கடவுள் புண்யத்திலே திருப்தியாத்தான் இருக்குது, பார்ப்பம், இதிலே நாலுகாசு கிடைச்சுதானா, சின்னப்பன் மகளையே நம்ம மாடசாமிக்குப் பார்க்கலாம்—" என்று, எண்ணிக்கொண்டபடிதான் ஒவ்வொரு நாளும், கத்திரி தன்னுடைய கரும்புத் தோட்டத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தான். அதுக்கென்ன, அப்படியே செய்யலாம்—அப்படியே செய்யலாம் என்று நல்வாக்கு கொடுப்பது போல, கரும்பு அசைந்தாடிக் கொண்டிருந்தது.

மொத்தமாக நானே எடுத்துக் கொள்கிறேன் — என்று சொல்லி அருணாசலம், பயிர் வளரும்போதே கத்திரிக்குப் பணம் கொடுத்து வைத்திருந்தார்; விலையைச் சமயமறிந்து நிர்ணயம் செய்துகொள்ளலாம் என்பது அவர் எண்ணம்—மகராசன், நம்மைக் கெடுப்பாரா—நம்பி முன்பணம் கொடுத்தவருக்கு, நாமத்தான் துரோகம் செய்ய முடியுமா என்று நியாயம் பேசினான் கத்திரி.

**"சர்க்கரை உற்பத்தி, தேவைக்கு அதிகமாகிவிட்டது. விலை வீழ்ச்சி அடைகிறது. ஆகையால், இந்தத் தடவை கரும்பு 'மாசூல்' விவசாயிக்குத் தகுந்த 'பலன்' தராது என்று கருதப்படுகிறது"**

தினசரியில் இந்தச் செய்தியையும், இதற்காதரவான புள்ளி விவரத்தையும் படித்தார் அருணாசலம், உடனே, கத்திரியிடம் கரும்பு வாங்குவதில்லை, கொடுத்த முன்பணத்தை எப்படியாவது திரும்பப் பெற்றுவிட வேண்டும் என்று தீர்மானித்தார். உண்மை நிலைமை தெரிவதற்குள்ளே இதை முடித்துவிட வேண்டும் என்று துடித்தார். கத்திரிக்கு, கரும்புதான் கண்ணுக்குத் தெரிந்தது—விலை ஏறுவதால் இறங்குவதால் உண்டாகும் கசப்பு எப்படித் தெரியும்—அனுபவிக்காத முன்பு.

அருணாசலத்துக்குச் சாதகமாக, தானாக ஒருசம்பவம் நடைபெற்றது.

அந்தப் பகுதியில் புதிதாகத் துவக்கப்பட்ட சர்க்கரை ஆலையில், பெரிய புள்ளியாக இருந்தவர் கருப்பண்ணஞ் செட்டியார்; காங்கிரஸ் கட்சியிலே முக்யஸ்தர்; அந்த ஸ்தானத்தைப் பெற அவர் அதிக ஆண்டுகள் பணியாற்றவில்லை; ஆகவே, காங்கிரஸ் கமிட்டியிலே அவர் அதிகாரம் செலுத்துவதை உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஓராண்டு சிறை சென்று,



சின்னப்பன்

வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்ட வந்தேமாதரம் என்று பட்டம் பெற்ற வரதப்பன், எதிர்த்தான். தனியாகப் பேசும் போது, வரதப்பனைத் தட்டிக்கொடுத்த காங்கிரஸ்காரர்களிலே பெரும்பாலானவர்கள் கமிட்டியில் உட்காரும் போது, கருப்பண்ணருக்குக் கை தூக்குவது கண்டு, காரணம் தெரியாமல் கலங்கினான் வரதப்பன். காரணம் செட்டியாருடைய கணக்கேட்டில் பளிச்சென்று தெரிந்தது!

ஏமாற்றமும் திகைப்பு மடைந்த வந்தேமாதரம், கருப்பண்ணனை எதிர்க்கத் தொடங்கி, கரும்பாலையைக் கண்டித்துப் பேசும் நிலைக்கு வளர்ந்து, பிறகு கிராமம் கிராமமாகச் சென்று, ஆலைக்குக் கரும்பை விற்றுவிட்டு, ஆண்டி ஆகாதீர்கள், முதலாளியைக் கொழுக்கவைக்காதீர்கள்—நீங்களே வெல்லம் காச்சினால், ஆலைக்காரன் கொடுப்பதைவிட அதிக இலாபம் கிடைக்கும் என்று 'பிரசாரம்' பலமாகச் செய்தான். அடிதடியுடன் கூட்டம் நடைபெறும்.

இதையே, அருணாசலம் சாக்காக்கிக் கொண்டார்.

வந்தேமாதரம் நடத்திய கூட்டத்திலே, ஒருநாள், கத்திரி தலைமை வகித்தது, இதற்குச் சாதகமாகி விட்டது. கூப்பிட்டனுப்பி கோபமாகக் கேள்விகள் கேட்டார்.

"பெரிய லீடர் ஆய்விட்டீரே ஐயா! உம்மிடம் எனக்கு ஏன் தொடர்பு..."

"நான் லீடராவது மண்ணாவது... அந்த வந்தேமாதரம் நல்ல புள்ளையாண்டானுங்கோ...... கூட்டம் போட்டா, சிறுசுகளும் பொடிசுகளும் கல்லை விட்டு எறியுது, நீ தலைமையா இருந்தா, ஒழுங்கா கூட்டம் நடக்கும்னு கேட்டுக்கிட்டதாலே, அதுக்கென்ன ஆகட்டும்னு பெஞ்சிமேலே உட்கார்ந்தனுங்க... வேறே ஒரு தப்பு தண்டாவும் கிடையாதுங்க..."

"அதெல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாது கத்திரி. நான் உன் கரும்பை வாங்கினா, அந்த வந்தேமாதரம் 'கலாட்டா' செய்வான்... எனக்கு ஏன் வீணா வம்பு...நான் கொடுத்த பணத்துக்கு, ஒரு சீட்டு எழுதி கொடுத்துவிட்டு, நீ மகராஜனா, அந்த வந்தேமாதரம் சொன்ன பாசனைப்படி வெல்லமே காச்சு, நிறைய இலாபம் கிடைக்கும்.."

எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை; கரும்புக்காக முன்பணமாகக் கொடுத்த தொகைக்குக் கடன் சீட்டு எழுதி வாங்கிய பிறகுதான், அருணாசலம் காபி குடித்தார்.

வந்தேமாதரம், விடவில்லை; கத்திரியை முற்றுகையிட்டான்; கரும்பு வெல்லமாயிற்று; கத்திரி கடன்காரனானான்; வந்தேமாதரம் தற்காலிகமாக வேறு ஜில்லா சென்றுவிட்டான்!

சின்னப்பன் மகளைத் தன் மகனுக்குப் பார்க்கும் திட்டம் 'அடுத்த கரும்புக்கு'ப் பிறகுதான் என்று கத்திரி தீர்மானித்துவிட்டான். செங்கரும்புக்கு இந்த வருஷமும் கலியாணம் நடக்காது போலிருக்கு என்று கிராமத்தார் பேசிக்கொண்டனர்.

**காளை**, சின்னப்பனைச் சும்மா விடவில்லை; செலவு வைத்தபடி இருந்தது.

ஓராண்டுக்குப் பிறகு, காளையும் இளைத்து விட்டது, சின்னப்பனும் சோர்ந்து போனான், செங்கரும்பும் கவலை கொண்டாள்; அவள் அண்

ணன் சென்னை மில்லிலே சச்சரவு செய்துவிட்டு 'ஊரோடு' போயிருப்பதுதான் உத்தமம் என்று கூறி விட்டு கிராமம் வந்து சேர்ந்தான்.

அருணாசலம், அசல் பிறகு கொடுக்கட்டும், வட்டியாவது தர வேண்டாமா, என்ன இந்த சின்னப்பனுக்கு வாக்குச் சுத்தமில்லையே என்று ஆள்விட்டுக் கேட்டார்; இந்த விவகாரம் பரவுவதற்குள் எப்படியாவது கடனைக் கட்டிவிட வேண்டும், இல்லையானால், செங்கரும்பு திருமணத்துக்கு யாராவது ஏற்பாடு செய்ய வருகிறபோது சங்கடம் உண்டாகும் என்று எண்ணிக் கவலைப்பட்டான் சின்னப்பன். பலவிதமான யோசனைகளுக்குப் பிறகு, காளையை விற்றுவிட்டு — கடனைக் கட்டிவிட்டு — மிச்சமிருக்கும் பணத்துக்கு, ஏதாவது ஒரு 'கிழமோ கிட்டோ' கிடைத்தால் அதை வாங்குவது என்று தீர்மானித்தான். சந்தைக்கு, காளையை ஓட்டிக்கொண்டு போனான்—சகுனம் பார்த்தான பிறகுதான்!

சந்தையிலே அன்று விசேஷமான கூட்டம்; சர்க்கார் சந்தையைச் சினிமாப் படம் எடுத்துக் கொண்டிருந்ததால்.

கந்தல் துணிக்காரர்களை ஒரு மூலைக்குத் துரத்தினர்கள் போலீசார்; 'வாட்டசாட்டமான' ஆடவர்களையும், கட்டு குலையாத பெண்களையும், முன்பக்கம் நடமாடச் சொல்லி, படம் பிடித்துக்கொண்டிருந்தார்கள். சின்னப்பன், சிறிது நேரம் இதை வேடிக்கை பார்த்துவிட்டு, ஒருமரத்தடியில் காளையைக் கட்டிவைத்து, தீனி போட்டுவிட்டு, 'கிராக்கி' வரட்டும் என்று காத்துக்கொண்டிருந்தான். பலபேர் வந்து பார்த்தார்கள்,—பாரி மாடு! இதுக்குத் தீனிபோட்டு கட்டி வராது—என்றெல்லாம் கூறிவிட்டு, வேறு நொண்டி நோஞ்சலை, இருபது முப்பதுக்கு வாங்கிக்கொண்டு சென்றார்கள். 60 ரூபாய்க்குமேல் ஒருவரும் கேட்கவில்லை; சின்னப்பனுக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது; அருணாசலத்துக்கு மட்டும் அவன் அசலும் வட்டியுமாக எண்பது தரவேண்டும், அதைக் கொடுத்துவிட்டு, மிச்சம் முப்பது நாற்பதாவது இருக்கும், அதைக் கொண்டு ஏதாவதொரு 'சப்பை'யைப் பிடித்துக்கொண்டு போகலாம் என்று எண்ணி, சந்தைக்கு வந்தான் — அங்கே அறுபதுக்கு மேல் ஆள்வராதது கண்டு அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது; அந்திப் பொழுதுமாயிற்று; வீடு திரும்பிவந்து, தொழுவத்தில் காளையைக் கட்டும்போது, சின்னப்பனுக்கு கோபமே வந்துவிட்டது. உள்ளே, உத்தண்டன் இருக்கக் கண்டான்; உறவினன்; ஊர்நாடு அறிந்தவன்; மாமன் முறை சின்னப்பனுக்கு.

"மாமனா! எப்ப? வந்து எவ்வளவு காலமாச்சி..."

"எதுக்கும் வேளைவரவேணுமே. சரி, செங்கரும்புக்கு ஏதாவது 'இடம்' பார்த்தாயா?"

"நல்லா இருக்கு மாமா, நீ கேட்கிற கேள்வி. நான்தானா இடம் பார்க்கவேண்டியவன்? நீ, பார்த்துச் சொன்னா சரிதான்..."

"சாமர்த்தியமாப் பேசறியே...சரி ...நானும் ஒரு இடம் பார்த்தூட்டு அதைச் சொல்லத்தான் வந்தேன்...ஈச்சம்பாடியிலே என்னுடை பெரிய மாமன் வகையிலே ஒரு பையன் இருக்கிறான் — மாந்தோப்பும் பூந்தோட்டமும் பயிர் செய்யறான், கெட்ட நடவடிக்கை எதுவும் கிடையாது ... எல்லா வகையிலும் உனக்கு ஏத்தவன்தான்...கஞ்சன்தான் உன்னைப்போலவே...என்ன சொல்றே..."

"நான் என்ன சொல்ல இருக்குதாம். அவளைக் கேட்டயா?"

"யாரை? செங்கரும்பையா?"

"அவ ஆத்தாளை..."

"அவ என்னா சொல்றா? சினிமாவிலே பார்க்கறுளேல்லோ அதுபோலே, புள்ளே வந்து பொண்ணை பாக்கட்டுமேன்னு சொல்றா..."

"இவளை நான் பாத்துத்தான் கலியாணம் கட்டிக்கிட்டனுமா...?"

"நானும் சம்மதம்னு சொல்லிப் போட்டேன்... அடுத்த திங்கக் கிழமை வரலாம்னு யோசனை...உன்னுடை அபிப்பிராயம் என்ன?"

"அடுத்த திங்களுக்கு வேணும், மாமா, அதுக்கு அடுத்த திங்களுக்கு வந்தா நல்லா இருக்கும். அன்னக்கி நம்ம கிராமத்திலே கன்னி கோயில் திருவிழா...அதையும் பார்த்தமாதிரியா இருக்கும்..."

"அதுவும் சரிதான்...கன்னி கோவிலை, நீதானே பார்த்துக் கொள்றே..."

"ஆமாம், என் தலையிலேதான் போட்டுவிட்டாங்க..."

"செச்சே! சாமி காரியத்தை அப்படிச் சொல்லாதே."



உத்தண்டன்

சின்னப்பன் மனம் மிகத் தீவிரமாக வேலைசெய்தது. செங்கரும்பைப் பார்க்கவருகிறபோது, கன்னி கோவில் திருவிழாவைச் சற்று தடபுடலாக நடத்திவைக்க வேண்டும், கிராமத்திலே தனக்கு இருக்கும் செல்வாக்கைப் பார்த்து, தனக்கு மருமகனாக வரப்போகிறவன், மலைத்துப்போகவேண்டும் என்று எண்ணினான். எதற்கும் அந்தபாழாய்ப் போன காளை விலைபோகவேண்டும்; விலையைக் கொஞ்சம் தள்ளிக் கொடுத்தாவது அடுத்த வாரச் சந்தையிலே விற்றுவிடவேண்டும் என்று தீர்மானித்தான்.

*

"முடிவாச் சொல்லிப் போடறேன்... உன்னைப் பாத்தா நல்ல புள்ளையாண்டானாதோணுது... தெரியுதா...நான் அருமையா வளத்து வந்த காளை இது...ஏகப்பட்ட விலை கொடுத்து வாங்கினேன்...ஒரே விலை,...பேரம் கீரம் வேணும், நூத்தி ஐம்பது...தரகுக்காரனே வேண்டாம், நமக்குள்ளாகவே முடிச்சுக்குவோம் ... நூத்தி ஐம்பது..."

"ஆத்தாடி! ஆனைக்குட்டி விலையல்ல சொல்றீங்க. இப்ப மாடு விலை எவ்வளவோ விழுந்துபோச்சு ...நீங்கபோன வருஷத்து நினைப்பிலே பேசறிங்க—எண்பது ரூபா, சம்மதம்னா சொல்லுங்க, இல்லையானா அதோ பாருங்க, அந்தாலே இருக்கே செவிலி, அது அறுவத்தஞ்சிக்கு 'ரெடியா' இருக்குது..."

"அடே, இருவத்தஞ்சிக்குக் கூடத்தான் எருது இருக்குது—எல்லாம் எருதுதானு"

"சொல்லுங்க...நான் பெரியவங்களுக்குக் கட்டுப்பட்டவனுங்க ... அவங்க எண்பதுக்குமேலே தரப்படாதுன்னு கண்டிப்பாச் சொல்லி விட்டாங்க..."

"நான், இதைவித்துவிடவேமாட்டேண்டாப்பா! கொஞ்சம்கடன் கட்டணும், மேலும் திருவிழா செலவு வேறே இருக்கு..."

"ஒவ்வொருத்தரும் அப்படித் தான். நானும் கடன் வாங்கிக்கிட்டுத்தான், வந்திருக்கிறேன். போன சந்தைக்கு வந்தேன், முப்பது, நாற்பதிலே ஒரு காளை பிடிச்சிக்கிட்டுப் போகலாம்னு ... எல்லாம் ஆனை விலை குதிரை விலை சொல்றுங்க... நடந்து வந்தது தான் கண்ட பலன் ...இந்தத் தடவை துணிஞ்சி, கடன் வாங்கிகிட்டு வந்திருக்கிறேன்... ஆசாமி அசகாயச்சூரன். ஐம்பது கடன்கொடுக்கறதுக்குள்ளே, நூறு தடவை, நில புலனைப்பத்தின தகவலைக் கேட்டுகிட்டான்"

"பணம் தருகிறவங்க அப்படித் தான்...சரி, பத்து தள்ளிக்கோ..."

"ஒரு ஐஞ்சுவேணுமானு கூட்டிக்கிங்க, எண்பத்தி அஞ்சா இருக்கட்டும்...ஏதோ, எனக்கு உபகாரம் செய்கிறதா எண்ணிகிட்டுத்தான் கொடுங்களேன். உங்க வீட்டுக்கே நான் வந்தா, ஒரு வேளை சோறு போடமாட்டிங்களா ... அட, ஒரு பத்துநாள் சோறுபோட்டதா எண்ணிக் கொள்ளுங்களேன்..."

"கூத்துலே பேசறமாதிரித்தான் பேசறே...இதோ பார்டா, தம்பி, வீணு ஏன் பேரம் பேசறே, நூற்றி இருவதுக்குத் தம்பிடிகுறையாது."

"நீங்க மாடு வியாபாரம் செய்கிறிங்க...நான் மனஷாளோட கஷ்ட நஷ்டத்தைச்சொல்லி விலை கேக்கிறேன், அதுதான் வித்தியாசம். உம்! எதுக்கும்கொடுப்பினை இருக்க வேணும்..."

"அடே அப்பா! பெரிய சாமியாரு மாதிரிபேசறயே, சரி, நூறு ரூபா ஒரே விலை..."

"ஏனுங்க, மடியிலே இருக்கறது பூராவும் கொடுத்துடச் சொல்றீங்க...... நியாயமுங்களா... சந்தைக்கு வந்து போறவனுச்சே, ஏதாச்சம் பழம் பலகாரமாவது வாங்க வேணுமுங்களா......இந்தாங்க 95..."

"கொடாகண்டனு இருக்கறயே...சரி ...கொடு, கொடு...ஆமா, எந்தஊரு...?"

"சொந்தஊரு சொர்ணபுரிங்க..."

காளை கைமாறிவிட்டது. கடன் கட்ட, சின்னப்பன் கிளம்பினான் அருணாசலத்தின் கடைக்கு. கடனைக்கொடுத்துவிட்டு, மிச்சமிருந்த பத்து ரூபாயுடன் வீடுதிரும்பினான்

கிராமத்துப் பெரியவர்கள் "காளை செலவு அதிகம் கொடுக்குதுன்னு, சின்னப்பன், நல்ல விலைக்கு விற்று விட்டான்..." என்று பேசிக்கொண்டனர்.

கன்னி கோயில் திருவிழாவுக்குப் 'பெண்' பார்க்க வருவதாகச் சொன்னபடி ஈச்சம்பாடிக்காரர் வரவில்லை. புதிதாக 'உழவு' மாடு வாங்கிவிட்டான் ... அதனாலே வேலைத் தொந்தரவு—நீ ஒரு நடை வா, நாமேபோய், பையனைப்பார்த்து விட்டுவருவோம் என்று சொன்னார், மாமன்.

ஈச்சம்பாடியார் வீட்டுக் கூடத்தில் சம்பந்தியாகப் போகும் கிழவனைக் கண்டு, சின்னப்பன் பேசிக்கொண்டிருந்தான். மாமன் உடனிருந்து உபசாரம் பேசிக்கொண்டிருந்தான்.

"ஏதோ, ஈசுவரன் கிருபையாலே, நிலம் கொஞ்சம் இருக்குது—மாடு கண்ணும் இருக்குது......நாலு நாளைக்கு முன்னாலேகூட, இரு நூறு ரூபா விலை கொடுத்து ஒரு தரமான காளை வாங்கினோம்"

"நம்ம சின்னப்பனும் நல்ல சமுசாரிதான்...ஒரே மக..."

"கடன் கிடன்...?"

"காலணு கிடையாதுங்க? அனியாய வட்டி அருணாசலத்திடம் கொஞ்சம் கடன் இருந்தது. ஒரு சின்ன சொல்லு சொன்னான்னு, கோபத்திலே, போன வாரம், தங்கமான காளையை முன்னூறு ரூபாய்க்கு வித்துப் போட்டு, அவனோட முப்பது ரூபா கடனை முகத்திலே வீசி எறிந்துவிட்டு, மிச்சத்தை, பொண்ணோட கலியாணத்திலே சேர்செய்ய வைத்துக்கொண்டான்..."

தா, தா! பிடி, பிடி! விடாதே... என்று கூச்சல் கேட்டு, சின்னப்பன் வெளியே வந்து பார்த்தான்... காளையைத் துரத்திக்கொண்டு வந்தான் ஒருவன் — காளை, சின்னப்பனைக் கண்டதும் துள்ளிக்கொண்டு கிட்டே வந்து நின்றது.

சின்னப்பன் சந்தையிலே விற்ற காளைதான் அது.

பின்னோடு வந்து நின்றான் ஈச்சம்பாடி மாப்பிள்ளை.

"இவன்தான்" என்றார் ஈச்சம்பாடியார், மகனைக் காட்டி.

"இதுதான் என் காளை" என்றான் சின்னப்பன், காளையைக் காட்டி.

"மூனு நூறுன்னு சொன்னயேப்பா..." என்று சிரித்தார் கிழவர்.

"இருநூறு கொடுத்ததாக நீங்க சொல்றபோது, நான் ஒரு நூறு கூட்டிச் சொன்னா என்னவாம்..." என்றான் சின்னப்பன்.


எல்லோரும் நிலைமையை உணர்ந்து சிரித்தனர்.

"காளையைப்பத்தி நாம பேசிக்கொண்டது பொய் — ஆனா, என் மக, செங்கரும்பு விஷயமா நான் சொன்னது அத்தனையும் நிஜமுங்க ...நீங்க கண்ணாலே பார்த்தாலே தெரியும்..." என்றான் சின்னப்பன்.

"அதேபோலத்தான், என் மகன் விஷயமாக நான் சொன்னது, காளை விஷயமாச் சொன்னதுபோல அல்ல; அவ்வளவும் நெஜம்" என்றார் ஈச்சம்பாடிக் கிழவர்.

"நீங்கச் சொல்லவே தேவையில்லையே......சந்தையிலேயே நான் பார்த்துவிட்டேனே........ அடே அப்பா! விடாகண்டனுச்சே" என்றான் சின்னப்பன்.

"செங்கரும்புக்கு ஏற்றவன், சகல விதத்திலும் நம்ம சிங்காரம்" என்றார் மாமன்.



திருமணம் நிச்சயமாகிவிட்டது.

கத்திரி காதுக்கு இந்த விஷயத்தை எட்ட வைத்தவர் அருணாசலந்தான் — அவர் இதனால் விபரீதம் ஏதும் நடைபெறும் என்று எதிர்பார்த்துச் சொன்னவரல்ல.

கத்திரிக்குக் கோபம் கோபமாக வந்தது; நமக்குக் கரும்பிலே நஷ்டம் வந்துவிட்டது தெரிந்துதான் செங்கரும்புக்கு சின்னப்பன் வேறு இடம் பார்த்து விட்டான் என்று எண்ணினான். இவ்வள




கத்திரி

வுக்கும், சின்னப்பன், செங்கரும்பைத் தருவதாக வாக்களிக்கவுமில்லை.

கத்திரியின் கோபம், சின்னப்பன் மீதுமட்டுமல்ல—சிங்காரத்தின் மீதும் பாய்ந்தது — அவனுடைய காளையின்மீதும் பாய்ந்தது.

"திமிர் பிடிச்சு அலையறான் சிங்காரம்! காளைபோலக் கொழுத்துக் கிடக்கிறோமே என்கிற திமிர்; பார்க்கிறேன் ஒரு கை" என்று கருவிக் கொண்டிருந்தான்.

கழனிப்பக்கமும், களத்துமேட்டிலும், தன் சம்பந்தமாக இப்படியொரு விரோதம் வளருவது செங்கரும்புக்கு எப்படித் தெரியும்—அந்தக் கட்டழகி, களை எடுப்பதும், பூ பறிப்பதும், கோழிக் குஞ்சுகளைப் பாதுகாப்பதும், மரத்திலே மாங்காய் பறிப்பதும், ஆட்டுக்குட்டிகளோடு ஓடி ஆடுவதுமாக இருந்து வந்தாள்.

"சிங்காரம் இலேசுப்பட்டவனல்ல புள்ளே! நீ சிவிச் சிங்காரிச்சுக்கிட்டு இருந்தா, அவன் பார்த்து இளித்துக்கிட்டுக் கிடக்கிறவனல்ல; வேலை, தரமாச் செய்ய வேணும், ஆமாம், வேலையிலே ரொம்பக் கறாரானவன்" என்று சின்னப்பன் சொல்லுவான்.

தன் மகன், அக்கரையோடு பாடுபட்டு, நாலு பேர்போலே, முன்னுக்கு வருகிற போக்கிலே இல்லை என்று, கத்திரி அடிக்கடி கண்டித்துவரவே, கத்திரி மகனுக்கும் சிங்காரத்தின்மீது கோபம் பிறந்தது.

உனக்குப் பார்த்த குட்டியை சிங்காரமல்ல கட்டிக்கப்போறானாம் என்று அந்தக் கிராமத்து வாலிபர்கள் கேட்டுக் கேட்டு அவனுக்கு மேலும் கோபமூட்டினர், அவன், இந்தக் கோபத்தால் அறிவிழந்து, பொறுமையிழந்து, கண்டவர்களுடன் வம்புக்கு நின்றான்.

கத்திரியின் கோபம் வெள்ளம் போலப் பொங்கிற்று.

சிங்காரத்தின் காளையின் காலில் ஒரு அரிவாள் வெட்டு விழுந்தது—படட்டும் பாவிப் பய மகன், என்று களிப்புடன் கூறிக்கொண்டான் கத்திரி. அவனுக்குச் சிங்காரத்திடம் கோபம் இருப்பது அறிந்தவர்கள் "அண்ணேன்! போட்டதையே போட்டயே, துண்டா விழக் காணோமே, காலு, கூடி வந்தூடும்னு டாக்டரு சொல்றாராமே" என்று கேட்டனர்; "அட போங்கடா, போக்கிரிப் பசங்களா; நான் தான் அந்தக் காளையோட காலை வெட்டினேன்னு கண்டிங்களா?" என்று கத்திரி கேட்பான் — ஆனால் கோபித்துக் கொள்வதில்லை. உண்மையில் காளையின் காலில் அரிவாள் கொண்டு தாக்கியது கத்திரி அல்ல—அப்படி கிராமத்துக்காரர் எண்ணிக்கொண்டதும் பேசிக் கொண்டதும், அவனுக்கு ஏதோ வீரப்பிரதாபமாகத் தெரிந்தது, மகிழ்ந்தான்.

காளையில் துவங்கி, கத்திரியுடைய கழுத்துக்குச் சென்றது அரிவாள்; நல்லவேளையாக, கழுத்தில் வெட்டு விழாமல் தோள்பட்டையில் விழுந்தது — சிங்காரம் மூன்றாண்டுகள் 'உள்ளே' தள்ளப்பட்டான்.

அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான், செங்கரும்பு சிங்காரத்தைப் பார்த்தாள்—இருவர் உள்ளமும் ஒன்றுபட்டது. தன் பொருட்டுத்தான் இவ்வளவு விபரீதமும் நேரிட்டது என்று செங்கரும்பு மனச்சஞ்சலமடைந்ததுடன், இனி சிங்காரத்தைத்தான் கலியாணம் செய்து கொள்ளமுடியும் வேறுஒருவனுக்கு நான் மனைவியாகப் போவதில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டாள்.

ஜெயிலுக்குப் போய்வந்தவனுக்குப் பெண் கொடுக்க சின்னப்பனுக்கு விருப்பமில்லை; என்னும், மகளுடைய பிடிவாதத்தைப் போக்கவும் முடியவில்லை.

"பைத்தியக்காரப் புள்ளே" என்று கூறுவான்.

"சிங்காரத்தோட நல்ல குணத்தைப்பத்தி நீயேதான் பன்னிப் பன்னிச் சொல்லி, அவ மனசைக் கெடுத்துவிட்டே" என்று அவன் மனைவி குறைபட்டுக்கொண்டாள்.

ஜெயிலுக்குள் இருந்த சிங்காரம், செங்கரும்பு தன்னிடம் உள்ளன்பு கொண்டிருப்பது கேட்டு உள்ளம் பூரித்து இருந்தான். சிறையிலே இருந்தவர்களில் தன்னிடம் நெருங்கிப் பழகியவர்களிடம், வெளியே போனதும் தனக்குக் கலியாணம்—பெண் நிச்சயமாகிவிட்டது—என்று சந்தோஷமாகச் சொல்லுவான்.

மூன்றாண்டுகள் உருண்டோடின; விடுதலை கிடைத்தது சிங்காரத்துக்கு; செங்கரும்பின் நினைவு தாலாட்ட அவன் ஏறிச் சென்ற இரயிலிலேயே உறங்கிப் போனான்; சுவை தரும் கனவுகள்! வைக்கோற் போருக்குப் பக்கத்திலே அவள் நின்றுகொண்டிருக்கிறாள், வயலோரத்திலிருந்தே அதைஅவன் பார்க்கிறான். தா, புள்ளே! செங்கரும்பு! ஆடு வருதே வயலு பக்கம், ஓட்டிவிடக்கூடாதா? என்று கேட்கிறான், அவளுடைய குறும்புப் புன்னகை அவனுக்கு இன்பமளிக்கிறது. இதோ கஞ்சி கொண்டு வருகிறாள், அதைத்தான் எவ்வளவு கனிவுடன் அவன் 'கையில்' தருகிறாள்! இப்படிப்பட்ட பலப்பல கனவுகள்.

இரயில் நின்றது — ஒரே அல்லோலகல்லோலம்.

வெள்ளம்—உடைப்பு — இரயில் பாதை பிளந்துவிட்டதாம்—இரயில் போகாதாம்.

இரவெல்லாம், ஏக்கத்துடன் இரயிலில் காலந்தள்ளினான்—பகல் வந்தது—பயங்கரமான செய்திகள் கூறினர்.

கடல் பொங்கிற்றாம் — பேய்க்காற்று அடித்ததாம் — உடைப்பு எடுத்து ஊர் பாழாகிவிட்டதாம்—இலட்ச இலட்சமாக மாண்டு போனார்களாம் — இப்படி எல்லாம் 'சேதி'.

"'தோப்புத்துறை' யிலே கூட வெள்ளமுங்களா?" என்று சிங்காரம் கேட்டான்.

"தோப்புத்துறைதான் இருந்த இடமே தெரியாமே முழுகிப் போச்சாமே" என்றான் ஒருவன்.

ஐயயோ! என்று அலறினான் சிங்காரம்.

தோப்புத் துறையில்தான் அந்தத் தோகைமயிலாள் இருக்கிறாள்—என்ன கதியோ, என்ன கதியோ!

வெள்ளம்வருவதற்கான குறிகளைக் கண்டறிந்த ஒரு சிலர், சின்னப்பனிடம் வந்து சொன்னார்கள்.

இந்தப் பேய்க்காத்து சும்மாவிடாது, சின்னப்பா! எனக்கென்னமோ மனசு திக்கு திக்குன்னுது, கிளம்பி எங்காச்சும் இப்பவேபோறது நல்லதுன்னு தோணுது. நீ என்ன சொல்கிறே? என்று கிராமத்துப் பெரியவர் கேட்டார். சின்னப்பன், முன்பு அடித்த புயலைக் கண்டவன்—அதனாலே, "பெரியப்பா! பயந்து சாகாதிங்க......எல்லாம் பாக்கு கடிக்கிற நேரம்தான் வீசும் இந்தப் புயலு — பார்த்துகிட்டே இருங்க, வெளுத்துப் போகப் போவுது, இன்னும் கொஞ்ச நேரத்திலேயே என்று கூறினான்.

அவன் கிராமத்தைவிட்டுப் போகாததற்குக் காரணம், தைரியம்மட்டுமல்ல, ஏதோ ஓர் விசேஷத்துக்காக கத்திரி அன்று அங்கு வந்திருந்தான், சின்னப்பனுக்குக் கத்திரியைக் கண்டதும் ஒரே ஆத்திரம். நமக்கு இவ்வளவு கெடுதியைச் செய்தவனுடைய கையையோ காலையோ ஒடித்து புத்தி புகட்ட வேண்டுமென்று ஆத்திரம் பிறந்தது. அதற்குச் சமயம் கிடைக்கட்டும் என்று காத்துக்கொண்டிருந்தான்,

ஊரை அழித்து, உயிரைக் குடித்தாலன்றி என் பசி அடங்காது என்று கொக்கரித்தது பேய்க் காற்று. நேரிட இருக்கும் பெரிய விபத்தை முன் கூட்டியே அறிந்து இயற்கை கோவென அழுவது போலப் பெருமழை பெய்துகொண்டிருந்தது. விநாடிக்கு விநாடி, வேகம் அதிகமாகிக்கொண்டிருந்தது. கடலிலிருந்து கிளம்பிய கோரக் கூச்சல் காதைத் துளைத்தது. ஆபத்துகளையும் இடர்ப்பாடுகளையும் அனுபவித்து அனுபவித்து உரம் ஏறியிருந்த உள்ளம் கொண்டவர்கள் கிராமத்துக்காரர்கள் என்றாலும், திகில் அவர்களிடம் இம்முறை அதிகமாகப் புகுந்துவிட்டது.

கும்மிருட்டு எங்கும்! குடிசைகள் பிய்த்தெறியப்பட்டன! பெருமரங்கள் பேய்க் காற்றினை எதிர்த்து நின்றுபார்த்துமுடியாததால், கீழே



முறிந்து விழ, உன்னை இத்துடன் விடப்போவதில்லை என்று கூறுவதுபோல, பெருங் காற்று, மரங்களைத் தூக்கி எறிந்தன, இங்கும் அங்கும், எங்கும் கூக்குரல், கதறல், ஐயோ! அம்மா! வெள்ளம்புகுந்து விட்டது, எங்கும் அழிவின் சீற்றம். மக்கள வெள்ளத்தில் சிக்கிவிட்டனர்—அப்பா! அம்மா! தாத்தா! அக்கா! அலமேலு! ஆண்டியப்பா! ஐய்யோ, தெய்வமே...என்று அலறல்கள் கிளம்பின. தோப்புத்துறை வெள்ளக்காடாகிவிட்டது.

சின்னப்பன் குடும்பம் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டது. கால்நடைகளை முதலிலே எதாவது மோட்டாங் காட்டுக்கு ஓட்டிச்செல்லலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான் சின்னப்பன்—வெள்ளம் அவன் குடிசை இருந்த தெருக்கோடியில் வருவதாகக் கூறிக்கொண்டே பலர் ஓடினார்கள்—ஓடியா! ஓடியா செங்கரும்பு! என்று கூவியபடி சின்னப்பன் வெளியே ஓடினான்—செங்கரும்பும் ஓடினாள். முழங்காலளவு, இடுப்பளவு என்று தண்ணீர் விநாடிக்கு விநாடி ஏறிக்கொண்டே இருந்தது; குழந்தைகள் மூழ்கிவிட்டன; வயோதிகர்கள் நீந்த முடியாமல், வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டனர்; செங்கரும்பு தன்னால் கூடுமானவரையில் சமாளித்துப் பார்த்தாகிவிட்டது, அப்பா என்று கூறிச் சாய்ந்தாள்—சின்னப்பன், தன் மகளைவாரி எடுத்துக்கொண்டு, இழுத்துக் கொண்டே நீந்தினான் — திக்குத் தெரியாத நிலை—சின்னப்பனுக்கும் வலிவு தீர்ந்துவிட்டது—செங்கரும்புக்கு மூச்சுப் பேச்சில்லை.

வெள்ளத்திலே சிக்கிய கத்திரியும், வெகுபாடுபட்டான் துவண்டு கிடக்கும் செங்கரும்பும், கடைசி கட்டத்துக்கு வேகமாகச் சென்று கொண்டிருக்கும் சின்னப்பனும் கத்திரியின் கண்களில் பட்டவுடன் யாரு? சின்னப்பனா? என்று கூவிக் கொண்டே, தன் பலம் கொண்டமட்டும் நீந்திச் சென்றான் அவர்களிடம் —இதோ...இந்தாப்பா செங் கரும்பு...... இனி உன் மக...என்று கூறியபடி, சின்னப்பன், செங்கரும்பை, கத்திரி கையில் ஒப்படைத்துவிட்டு, பிணமானான்! பெருவெள்ளம் வேறு பலரைப் பிணமாக்க விரைந்துகொண்டிருந்தது.

எப்படி நீந்தினானோ, எங்கிருந்து அந்த வலிவும் துணிவும் பிறந்ததோ தெரியவில்லை, கத்திரி, கடைசியில் செங்கரும்பைக் காப்பாற்றிக் கரை சேர்த்தான்.

"அப்பா போயிட்டாரா? ஐயய்யோ, அப்பா!" என்று கதறினாள் செங்கரும்பு. கத்திரி சமாதானம் கூறவில்லை. "என் மகன்

## கேள்வியும்-பதிலும்

கேள்வி:— அதிர்ஷ்டம் என்றால் என்ன?

பதில்:— கடவுளின் குருட்டாம் போக்கு நிர்வாகத்திற்கு மற்றொரு ஆதாரம்.

★

கே:—நாகலோகத்திற்குப் போக 'டிக்கட்' எங்கே கிடைக்கிறது?

ப:— புற்றுக்குள் இருக்கிறது. கையைவிட்டுப் பாரும்.

★

கே:— அன்புக்கும் அம்புக்கும் என்ன வித்தியாசம்?

ப:— வளைக்கப்பட்ட புருவ வில்லிலிருந்து புறப்படும் போது இரண்டிற்கும் அதிக வித்தியாசமில்லை.

★

கே:— மொரார்ஜிதேசாய் (காங்கிரஸ் தலைவர்)க்குக் காது செவிடு என்கிறார்களே, உண்மையா?

ப:—பல்லாயிரக்கணக்கான மக்களின், அழுகுரல் அவர் செவியில் விழவில்லையே என்பதால் அப்படிக் கேட்கிறீரா? குண்டூசி கீழே விழுந்தாலும், அவர் காதில் கேட்கும். மக்கள் குரல் அவ்வளவாகக் கேட்காது!!

★

என்ன ஆனுனே...! என்று கலக்கம் கொண்டான்.

"குழந்தையைப் பறிகொடுத்தேன்"

"அம்மாவைத் தப்பவைக்க முடியாமலே போய்விட்டது"

"ஐயயோ, என் புருஷனை வெள்ளம் அடித்துக்கொண்டே போயிட்டுதே"

இப்படிப் பலருடைய கதறல்.

வெள்ளக்காடாகாமலிருந்த வேறிடம் தேடி, தள்ளாடி நடந்தனர், செங்கரும்பும் கத்திரியும். வழியில் வேரூர் பக்கமிருந்து, கத்திரியின் கிராமத்து மக்கள் 'குய்யோ முறையோ' என்றுகூவிக்கொண்டு, வந்தனர்—அந்தக் கிராமம் அடியோடு அழிந்துவிட்டது என்றனர்.

"மகளை மட்டும் தான் காப்பாற்ற முடிந்தது, பாவம்..." யாரோ ஒருவர் கூறினர், கத்திரியையும் செங்கரும்பையும் பார்த்துவிட்டு.

மூன்று நாட்கள், எங்கும் கிளம்பிவிட்ட பிண நாற்றத்தைச் சகித்துக்கொண்டு, ஒரு மேட்டாங்காட்டில், இருந்து வந்தனர் மக்கள்—விமான மூலம் தரப்பட்டதை வேகவைத்துக் குடித்துவிட்டு, உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டிருந்தனர்.

மூன்று நாட்களும், வேதனையுடன் திருத்துறைப் பூண்டியில் காலந்தள்ளினன் சிங்காரம்; வெள்ளம் வழிவிட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டதும் ஓடோடிச்சென்றுன் தோப்புத்துறைப் பக்கம்; வழியிலே இருந்த மேட்டில் செங்கரும்பு இருக்கக் கண்டான், உருமாறிப் போன நிலையில்...

"செங்கரும்பு......என் வயத்திலே பால் வார்த்தயே..."

"அத்தான்...வந்துட்டிங்களா...."

"அப்பா...என்ன ஆனரு...?"

"அவரு போயிட்டாரு...என்னே நெடுந்தொலைவு வெள்ளத்திலேயே சுமந்துகிட்டு நீந்தினரு......கடைசியிலே......அவர் போயிட்டாரு...... நானும் போயிருக்கவேண்டியவ தான்...கடைசி நேரத்திலே, இவரு தான் காப்பாத்தினரு..."

திரும்பிப் பார்த்தான், அவர் காலில் விழுந்து கும்பிட—கத்திரி! என்ன செய்வதென்றே தெரியவில்லை, சிங்காரத்துக்கு.

"நான் தாண்டாப்பா சிங்காரம், நானே தான்......இந்த செங்கரும்பு என் மருமக ஆகவேணும்னு கெடுதிசெய்து, உன்னை மூணு வருஷம் ஜெயிலுக்கு அனுப்பின அதே பாவிதான்.........ஆனு, சிங்காரம், முன்னே உனக்கு நான் செய்த கெடுதிக்கெல்லாம் பரிகாரம் தேடிட்டேண்டாப்பா, செங்கரும்பை வெள்ளம் கொண்டுபோகாமப்படி செய்து உன்னண்டை ஒப்புவித்துவிட்டேன். அந்த வெள்ளம்தான், எனக்கு இருந்த கெட்ட நினைப்பு, கேடுகெட்ட புத்தி எல்லாவற்றையும் அடித்துகிட்டுப் போயிட்டுது... மக்களெல்லாம்பட்ட அவதியை இந்தக் கண்ணுலே பார்த்தேன்... என் மனசு படாத பாடு பட்டுது... இந்தப் பொண்ணு, உயிருக்குத் துடிச்சிகிட்டு இருக்கிறதைப் பார்த்ததும், என் மனசு கேட்கலே...இன்னமும் கேடு செய்கிற புத்தி இருக்கக்கூடாது என்கிற நல்ல எண்ணம் உண்டாச்சி...நானும் நல்லவனுயிட்டேன்....சின்னப்பனைத்தான் காப்பாத்த முடியாமலே போயிட்டுது...இந்த வெள்ளம், எங்க கிராமத்தை அடியோடு அழிச்சுப்பூட்டுது, என் மகன், மாடு கண்ணு எல்லாம் போயிட்டுதாம்......ஊரார் சொன்னுங்க.....செங்கரும்பை என் மருமகளாக்கிக்கொள்ளவேனும் என்கிற ஒரே ஆசையாலே தான் நான் உனக்குக் கெடுதி செய்தேன் ...இப்ப, என் மகனே போயிட்டான்......"

"அழாதீங்க......அழாதிங்க..........இவ்வளவு பெரிய அழிவு நேரிட்டபோது, இத்தனை பெரிய உபகாரம் செய்யமுடிஞ்சதேன்னு பெருமைப் படுங்க........செங்கரும்பு உங்க மருமகளாகத்தானே ஆகவேணும்... உங்க மகனைத்தான் வெள்ளம் விழுங்கி விட்டதே.........என்னை உங்க மகனுக ஏத்துக் கொள்ளுங்க.........செங்கரும்பு, உங்க மருமக ஆயிடுரு......நீங்கதான் அவ மாமனுரு......"

சிங்காரத்தைக் கட்டித் தழுவிக்கொண்டான் கத்திரி.

வானம்பொழியவேண்டிய அழிவைப் பொழிந்தாகிவிட்டது, இதோ சூரிய வெளிச்சம் என்று சுட்டிக்காட்டினன் சிங்காரம், புன்னகை புரிந்தபடி.



ஒளி தேடி...

★

# வெசேலியஸ்

[ கோ. லீலா கிருட்டிணன் B. Sc. ]

சென்னை மரீனா கடற்கரையில் தனியே உட்கார்ந்திருந்தேன், ஒரு டிசம்பர் ஞாயிற்றுக்கிழமை மாலை. இரண்டு வாலிபர்கள், அவர்களுக்கே உரித்தான அலட்சிய மனப்பான்மையின்றி, ஏதோ தீவிரமான பொருளைப்பற்றிய சர்ச்சையில் மூழ்கி, மூன்று அல்லது நான்கு அடி தூரத்திற்குள்ளாகவந்து அமர்ந்தனர். தனியே இருந்த நான், தவறென மனத்திற்குப் பட்டபோதிலும் (அவர்கள் உரக்கப் பேசியதால்) அவர்களின் சர்ச்சையைப்பின்பற்ற ஆரம்பித்தேன். அவர்கள் இரண்டாவதாண்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களென அறிந்தேன். சில நாட்களில் தொடங்கப்போகும் உடற்கூற்றியல் தேர்வு பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். என் சிந்தனைக்கும் சற்று வேலைகொடுக்க ஆரம்பித்தேன்.

வெசேலியசுக்குமுன் உயிரியலுக்கு வித்திட்டவர் அரிஸ்டாட்டில். கி. மு. 384 முதல் கி. மு. 382-வரை வாழ்ந்த கிரேக்கச் சிந்தனையாளர்களில் ஒருவர் அவர். கிரேக்க நாட்டில் சிடெகெய்ரா என்ற இடத்தில் பிறந்தவர். பிராணிகளின் உடற்கூற்றை அறியப் பிராணிகளை அறுத்துத் தெரிந்துகொள்ளும் முறை அவருக்குமுன் இருந்ததில்லை. அரிஸ்டாட்டில் அம்முறையைத் துவங்கிப் பல பிராணிகளை (முக்கியமாக நாய்களை) அறுத்து உடற் கூற்றை ஆராய முயன்றார்.

அரிஸ்டாட்டிலின் ஊக்கமும், முயற்சியும், அறிவும் உயிரியலின் மேம்பாட்டிற்குப் பெரிதும் உதவின. அவர் உயிரினங்களின் மூளையில் இரத்தமே இல்லையென்றும், இப்போது இரத்தமெடுத்துச் செல்ல ஏற்பட்டதென்று நாம் அறிந்த தமனிகளில் காற்றே இருந்ததாகவும் நினைத்தார். இது தவறென்றாலும் உயிரியலைப்பற்றி முதலில் அறியவிரும்பி ஊக்கம் கொண்டு அறிவைப் பயன்படுத்தியதால் உயிரியலின் மேம்பாட்டிற்கு ஓர் அடிப்படையாக அமைந்தார்.

முதலில் கண்டுபிடித்த ஒன்றை ஆராய்ந்து, தவறுகள் கண்டு, திருத்துவதற்குத் தேவைப்படும் ஊக்கமும், முயற்சியும், அறிவும், புதிதாக முதன் முதலில் கண்டுபிடிப்பதற்கு வேண்டியதைவிடச் சற்றுக் குறைவேயாகும்.

அரிஸ்டாட்டிலுக்குப்பின்னர் பிளினி (கி. பி. 23–கி. பி. 79) என்ற உரோமானிய நாட்டுத் தளபதிகளில் ஒருவர் உயிரியலைப் பற்றிய ஆராய்ச்சியொன்றும் நடத்தாவிடினும் உயிரியலைப் பற்றிய அரிஸ்டாட்டிலின் பல்வேறு கருத்துக்களை ஒன்றாகச் சேர்த்துச் சீராக்கி மக்களுக்கு அளித்தார்.

அதன்பின்னர் சற்று ஊக்கத்துடன் கேலன் என்பவர் (கி. பி. 130—200) ஆராய்ச்சிகள் நடத்தினார். இவர் மனித உடற்கூற்றியலில் ஆராய்ச்சிகள் நடத்தவே விரும்பினார். ஆனால் எக்காரணத்தினாலோ மனிதப் பிரேதத்தின்மீது சோதனைகள் நடத்தாமல், கீழ் உயிரினங்களை அறுத்து நடத்திய சோதனைகளின் அடிப்படையிலேயே மனித உடற் கூற்றைப் பற்றிய பலவேறு கொள்கைகளை வெளியிட்டார். ஒரு நாயின் உடற்கூற்றைப் போலவேதான் மனித உடற்கூறும் இருக்கவேண்டும் என்ற கொள்கையுடையவர். அச்சமயத்தில் கேலனைப் பின்பற்றியவர்கள் ஏராளம். கல்லூரிகளில் அவருடைய கொள்கைகளே போதிக்கப்பட்டன. மாறுபட்ட கருத்துக்களைத் தர முயன்றவர்கள் பயித்தியக்காரரென ஒதுக்கப்பட்டனர்.

போலக்னா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த மோண்டினோ (14-வது நூற்றாண்டு) மூன்று மனித உடலை அறுத்து ஆராய்ந்து அதன் அடிப்படையில் கி. பி. 1315-ம் ஆண்டு மனித உடற்கூற்றியலைப்பற்றி ஒரு புத்தகத்தை வெளியிட்டார். ஆயினும் முன்பே கூறியபடி, கேலன் பேரிலிருந்த அளவற்ற நம்பிக்கையால் பேராசிரியர்களும், மக்களும் இவரைப் பற்றியோ இவரது ஆராய்ச்சிபற்றியோ கவனித்ததாகவே தெரியவில்லை.

மேற்கூறிய பல்கலைக் கழகத்திலேயே 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரென்கேரின், 100 மனிதப் பிரேதங்களை அறுத்து அவர் கண்டதைக் கூறமுயன்றார்; அவரும் மோண்டினோ போன்றே கவனிக்காமல் ஒதுக்கப்பட்டார்.

வெசேலியசின் ஆசிரியர்களில் ஒருவரான ஜேகப் சில்வியசு (1479–1555) மனித உடற் கூற்றியல் ஆசிரியர்களில் சிறந்தவராக வாழ்ந்தார். கேலனின் கொள்கைகளைச் சார்ந்தே அவருடைய கல்லூரி விரிவுரைகள் அமைந்ததுடன், கேலனின் கொள்கைகளைத் தெய்வீகமெனவும் போற்றினார்.

அதன் பின்னர்தான் மனித உடற்கூற்றியலில் ஒரு புரட்சியை உண்டாக்கிய சிந்தனைச் சிற்பி வெசேலியசு உயிரியலின் தற்போதைய உன்னத முன்னேற்றத்திற்கு அத்திவாரமிட்டார். இன்று வெசேலியசைப் பாராட்டி, ''உயிரியலுக்குத் திட்டமான அத்திவாரமிட்டவர்'' என்று உலகம் உணர்ந்தாலும், அன்று, எல்லாச் சீர்திருத்தச் செம்மல்களும் அடைந்த பல துன்பங்களை அவரும் அடைய நேரிட்டது.

முதன் முதலில் கேலனைப் பின்பற்றியவர், அதுதவறு என்று அறிந்த பின்னர், காரணங்களுடன் கேலனுடைய கொள்கைகளை எதிர்த்தார். மனித உடலைத் தானாக அறுத்து, ஆராய்ந்து, முற்றும் வேறுபட்ட உண்மைகளையே வெளியிட்டார். ஒருவருடைய கொள்கைகளையும் கூற்றையும் ஆராயாமல் அப்படியே ஒப்புக்கொள்ளும் முறையைக் காற்றில் பறக்கவிட்டவர்தான் வெசேலியசு. விஞ்ஞானிகளுக்கே தனிப்பட்ட உயர் குணமான, 'தாங்களே காண்பதும், கண்டதைக் காரணத்துடன் ஆராய்வதும்' ஆன முறைக்கு வித்திட்டவர் இவர்தான்.

புருசல்சு நகரமும், கி. பி. 1514ம் ஆண்டின் இறுதி நாளும்தான் வெசேலியசைப் பெற்ற நகரமாயும் பிறந்த நாளாகவும் பாக்கியம் செய்தவைகளாகும்.

புருசல்சில் பள்ளிப்படிப்பும் லோவெயின் பல்கலைக் கழகத்தில் கல்லூரிப் படிப்பும் முடிந்த பின்னர், தம்முடைய பதினெட்டாம் ஆண்டில் பாரிசு நகரத்திற்கு மருத்துவம் படிக்கச் சென்றார். மருத்துவப் படிப்பில் பட்டம் பெற்றபின் அவர்கற்ற லோவெயின் பல்கலைக்கழகத்திற்கே சென்றார். பின்னர்

(*18*-ம் பக்கம் பார்க்க)

# அசமந்தமே பேசுகிறது!!

6-ம் பக்கத் தொடர்ச்சி

அமைதியாக அந்த அருந்தலைவர் சொன்னார், "நான் ஜஸ்டிஸ் படிப்பதில்லை" என்று!

தம்பி! அவர் ஜஸ்டிஸ் கட்சியிலே முக்கியஸ்தர்—மற்றோர்முறை ஜஸ்டிஸ் கட்சி மந்திரிசபை அமைத்திருந்தால், அவர் நிச்சயம் மந்திரியாகி இருப்பார்! அவர், 'ஜஸ்டிஸ் படித்திடும் வழக்கமில்லை என்பதை, பதறாமல், கூறுகிறார்!!

கேட்டுக்கொண்டேன், தம்பி, கேட்டுக்கொண்டேன்! இப்படி எத்தனையோ!!

எதற்குக் கூறுகிறேன் என்றால், ஒரு கட்சியின் முக்கியஸ்தர் அதன் நிர்வாகக் குழுவிலே இடம் பெற்றவருக்கு இந்த அளவுக்குத்தான் 'அக்கரை' இருந்தது!! அதை எல்லாம் பார்த்துப் பார்த்து, கசப்பும் கிலியும் கொண்டிருந்த எனக்கு, இப்போது, நமது பொதுக்குழுவில் உறுப்பினர்கள் காட்டும் அக்கரையும், அளித்திடும் ஆய்வுரையும், பெற்றுள்ள தெளிவும், காட்டும் துணிவும், உள்ளபடி, தெம்பு தருவதுடன், தென்னகத்தில் நாம் நடத்திக்கொண்டுவரும் ஜனநாயகப் பரீட்சையில் நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவோம், என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

தம்பி!பொதுக்குழுகூடி,பிப்ரவரி-20 பொது வேலைநிறுத்தம் நடத்திக் காட்டுவது, தாயகத்தின் தன்மானத்தை அழித்திட எண்ணும் தருக்கரின் அகந்தையை எதிர்த்து அறப்போர் நடாத்திக்காட்டுவது என்று முடிவு செய்துவிட்டது. இனி, உனக்கும் எனக்கும், பெரியதோர் பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. நீயும் நானும், இந்தப் பெரும் பொறுப்பை எந்த அளவில், வகையில் நிறைவேற்றி வெற்றி காணப் போகிறோம், என்பதைக் காண, நாடு தயாராகிவிட்டது.

**பொது வேலைநிறுத்தம் என்றால் தமிழக மெங்கும் ஒரே நாளில், ஒரே முறையில், வெற்றியுடன் நடத்தப்பட வேண்டிய மகத்தானதோர் செயல்!!** சாமான்யமானது என்று எண்ணிவிடப் போகிறார்கள், தம்பி! இதனுடைய முக்கியத்துவத்தைத் தயவு செய்து நன்றாக விளக்கிச் சொல்லு.

இதென்ன பிரமாதம்? அடைக்கச் சொன்னால் அடைக்கிறார்கள்! அமளிக்குப் பயந்து அங்காடி மூடப்படும்! — என்றும் அலட்சியம் காட்டலாகாது, "இது ஒரு தீவிரமான திட்டமா? அங்கங்கே நடைபெறுகிற காரியத்தைப் பார்க்கும்போது இது உருசியற்ற, பசையற்ற காரியம்!" — என்றும் கவலையற்று இருந்துவிடக்கூடாது.

இது வெற்றிகரமாக நடத்தவிடக் கூடாது என்று இப்போதே நாட்டை ஆளும் 'நல்லவர்கள்' நானாவிதமான காரியத்திலும் ஈடுபட்டுவிட்டார்கள் — அதனைக் கவனித்தால், தம்பி! நாம் மேற்கொண்டுள்ள காரியம் எத்தகையது என்பது தெரியும்.

**குதிரை பறிபோன பிறகும் கொட்டிலைப் பூட்டாத குணவான் ஒருவரை முதலமைச்சராகப் பெற்றிருக்கிறோம். அவர் காதில் இடியோசை விழாது, மின்வெட்டு கண்ணில் படாது, பெருங்காற்று அவர் மேலாடையையும் அப்புறப்படுத்தாது! அவ்வளவு இறுகிப்போன மனம்!**

**ஏதிலும் ஓர் அலட்சியம், அக்கரையற்ற தன்மை! அந்து தானாக உருவாகட்டும் என்று இருக்கும் போக்கு!**

மீன் பிடிப்போன்கூட, 'தக்கை' தண்ணீருக்குள் போகிறதா என்று கவனித்தபடிதான், அரைத்தூக்க நிலையில் கரையில் உட்கார்ந்திருக்கிறான், இவரோ, மீன் தானாகத் தூண்டிலைப் பிடித்து ஆட்டினாலும், என்ன தொல்லை இது! மீன் நேராகத் துள்ளி ஓலைக் கூடைக்குள்ளேயே குதித்துத் தொலைக்கக் கூடாதா என்று கருதும் போக்கினராக இருக்கிறார்!

எந்த ஒரு பிரச்சினைக்காக நாடே இன்று கொந்தளித்துக் கிடக்கிறதோ, அது இவருடைய உள்ளத்தைத் தொட்டதாகக்கூடத் தெரியக்காணோம். அபாரமான நம்பிக்கையே இந்தப் போக்குக்குக் காரணம் என்கிறார்கள் ஆதரவாளர்கள்; திகைப்பால் செயலற்று மட்டுமல்ல, சிந்தனையற்றும் போய்விட்டார் என்று செப்புகிறார்கள் ஆய்வுரை வல்லோர்.

அப்படிப்பட்ட 'அசமந்த'ப் போக்கினரே, 'பொதுவேலை நிறுத்தம்' என்று கூறப்பட்டதும், பேசுகிறார்! ஆமாம், தம்பி! வழக்கமாக 'இரத்தினச் சுருக்கமாகப் பேசும் முதலமைச்சர், 'வேலை நிறுத்தம்' என்று கேள்விப்பட்டதும் "நீண்ட பிரசங்கம்" செய்திருக்கிறார்—சுதேசமித்திரன் கூறுகிறது.

**செஞ்சியில், முதலமைச்சர் போர்வையைக் கிழித்துக்கொண்டு, மெள்ள மெள்ளப் பழைய காமராஜர் வெளி வருகிறார்!!**

**சர்வ கட்சி மாநாடு கூடி, வேலை நிறுத்தம், கடை அடைப்பு, இதெல்லாம் செய்யப்போவதாகத் தீர்மானம் செய்திருக்கிறார்களாம். ஏன் இதெல்லாம்—என்னிடம்வந்து சொல்லலாமே! — என்று** துவக்கி, இறுதியில், 'கபர்தார்' கூறுகிறார்!

**பம்பாயைப் பார்த்துமா புத்தி வரவில்லை!—என்று கேட்டிருக்கிறார்.**

தம்பி! பொருள் தெரிகிறதல்லவா? பம்பாயில், என்னசெய்தோம் தெரியுமா? தடியால் தாக்கினோம், துப்பாக்கியால் சுட்டுத்தள்ளினோம், 71-பேர் பிணமானார்கள், நூற்றுக்கணக்கிலே படுகாயமடைந்தனர், ஆயிரக்கணக்கானவர்களைச் சிறையிலே அடைத்துவிட்டோம், புதிய புதிய போலீஸ், படை கொண்டுவந்தோம் — பட்டாளத்தையே ஏவினோம் — தெரியுமல்லவா—ஜாக்ரதை! — நீங்கள் ஏதேனும் கண்டனம் தெரிவித்தால், சுட்டுத் தள்ளுவோம்! என்கிறார்.

## இதுதான் காமராஜர்!

பாழாய்ப்போன பதவிக்காக மெத்தச் சிரமப்பட்டு, சமரசவாதி, எதிர்க்கட்சிகளை அணைத்துச்செல்பவர், எதையும் ஆத்திரப்படாமல் கவனிப்பவர், என்றெல்லாம் 'ராஜதந்திர' 'பட்டுப் பட்டாடை' போர்த்திக்கொண்டு, புது மனிதராகத் தோற்றமளித்து வந்தார், இத்தனை நாளாக! வேலை நிறுத்தம்—நாடெங்கும் — எல்லாக் கட்சியும் கூட்டாகி நடவடிக்கையில்

ஈடுபடும் என்று தெரிந்ததும், பழைய காமராஜர், பட்டாடையைக் கிழித்துக்கொண்டு வெளியே வருகிறார். பார்! பம்பாய் நகரை! என்று கூறிப் பயமுறுத்தப் பார்க்கிறார்! துப்பாக்கி இருக்கிறதாம்! அதனால் நாம் பயந்து சாகவேண்டுமாம்!! தம்பி! துப்பாக்கியின் பெயர் கேட்டுப் பயந்து சாவதைவிட, துப்பாக்கியின் குண்டுபட்டே இறந்துபடுவோமே! தமிழனால் இதுகூடவா முடியாது!! குடியாத்தம் தேர்தலில் குடும்பம் குடும்பமாக இவருக்குப் பணியாற்றியதற்கு; அவரும் ஏதா

தமிழகத்தில் இதற்கு முன் எப்போதும் இதுபோன்றதோர் கூட்டு முயற்சி உருவானதில்லை—இதனை அலட்சியப்படுத்துவதோ, அடக்கப் பார்ப்பதோ, பெரும் ஆபத்தாக முடியும்—எனவே—தீது பயக்கும் தீர்ப்பை மாற்றுக,

தமிழக எல்லைகளைத் தருக!

சென்னைக்குந் தமிழ் நாடு என்ற பெயரிடுக!

தட்சிணப் பிரதேச யோசனையைக் கை விடுக!

எதற்கும் நானிருக்கிறேன், எந்த நிலைமையையும் நான் சமாளித்து

# பம்பாய் காட்டும்

வது ஒரு வகையில் நன்றி காட்ட வேண்டாமா! அதனால்தான், **பம்பாய்!** என்று பேசுகிறார்.

இவர், 'நம்மவர்' என்று நாம் நாத்தழுப்பேறப்பேசியதும், 'நல்லவர்' என்று நாடெங்கும் பறை அறைந்ததும், உள்ளபடி இவரை நம்மவராகவும்—நல்லவராகவும் ஆக்கியிருந்தால், "பண்டிதரே! உமது பேச்சுக்கு நான் மறுபேச்சு பேசாதவன், அறிவீர்!! ஆனால் இதோ, நாடு உள்ள நிலைமையைப் பாரும்! கொதித்தெழுகிறது, போர்க்கோலம் கொள்கிறது! என்னைக்குணாளனே! குலக்கொழுந்தே! என்றெல்லாம் கூறிமகிழ்ந்த மக்கள், இன்று தாயகத்துக்கு வந்துற்ற கேட்டினைக்கண்டு மனம்பதறி, என்னையும் மீறி, எழுச்சி பெற்றுள்ளனர், இதனை 'ஏதோ' என்று எண்ணிவிடாதீர், பதவி பெறும் சூதல்ல, துவேஷ மனப்பான்மையல்ல, இப்போது எழுந்துள்ளது, விழிப்புற்ற தமிழகத்தின் வேதனைக் குரலொலி, தன்மானம் காத்திடத்தாயகம் எழுந்துள்ள காட்சி. இதிலே சகலரும் முனைந்து நிற்கிறார்கள் — சட்டத்தை மதித்திடும் பி. டி. ராஜன் தலைமை வகிக்கிறார்.

விடுவேன், என்று நான் ஆச்சாரியார்போலக் கூறி உம்மை ஏமாற்ற விரும்பவில்லை, அமைந்துள்ள கூட்டணியை எதிர்த்து நான் அடக்கு முறை ஏவினால், நாடு காடாகும்—எதிர்காலம் இருள் சூழும்—என்று காமராஜர் டில்லிக்குக் கூறுவார்!

ஆனால், அவரோ, நம்மைப் பயமுறுத்துகிறார்!

தம்பி! பொதுவேலை நிறுத்தம், நீண்டகாலப் போர்திட்டத்துக்கான முதல் முழக்கமாக அமையப்போகிறது! எனவேதான், முதலிலேயே இதனை முறியடித்திட காமராசர் சர்க்கார் முயற்சிக்கிறது.

டாக்டர் வரதராஜுலு, 'முட்பொறுக்கி' ஆழ்வாராகி, நமக்கு புத்திமதிகூறுகிறார்—வேலை நிறுத்தம்வேண்டாம் என்று பேசுகிறார்.

பம்பாய் என்ற உடன், தம்பி இவர்கள் சுட்டுக்கொன்ற மக்களின்

டைகள் மண்கூடுகளாகி, வாழ்வுக்கும் சாவுக்கும், வீட்டுக்கும் சிறைக்கும் வித்தியாசம் தெரியாத மனநிலையை மக்கள்பெற்று, புதியதோர் ஒற்றுமை, அசைக்கமுடியாத நம்பிக்கை பெறுகிறார்கள், என்பதல்லவா தெரிகிறது!

பதவியைக் கால் தூசு என்று உதறித்தள்ளும் வீரர்களைக் காண்கிறோம்!

மேலிடத்துக்குக் காவடி தூக்க, கட்டியங்கூற, மறுக்கும் தீரர்களைக் காண்கிறோம்!

கொடி கட்டி ஆள்பவர்கள் கொடுங்கோலராகி விட்டதால், இன்று குலைநடுங்கிப் பதுங்கும் நிலையைக் காண்கிறோம்.

மராட்டிய இன எழுச்சி கொழுந்துவிட்டெறியக் காண்கிறோம்.

மாவீரன் சிவாஜியின் மரபினர் நாங்கள்-மமதையாளர்கள் முன் மண்டியிட மாட்டோம்—வேண்டுமானால் எம்மை வெட்டி வீழ்த்துங்கள்—கழுகு தின்னட்டும், கயவர்களின் காலடி வீழ்ந்துகிடப்பதைவிட அது எவ்வளவோ மேலானதாகும் என்று கனலும் புனலும் ஒரு சேரச் சோரும் விழியுடன் கூறிடக் காண்கிறோம்.

நகரமும் குக்கிராமமும், ஆலையும் அங்காடியும், பள்ளியும் பண்டகசாலையும், துறைமுகமும் பிறவும், பாசறைக் கோலம் அடைந்தது காண்கிறோம்.

பம்பாயைப் பார்த்துமா புத்தி வரவில்லை, என்று நாமும் கேட்கிறோம்; அகந்தையுடன் அக்ரமத்தைத் திணிக்கும் போக்கினரைக் கேட்கிறோம்.

# பாடம்-பார்!

தமிழரசுக் கழகம்
திராவிட முன்னேற்றக் கழகம்
கம்யூனிஸ்டுக் கட்சி
பிரஜா சோஷியலிஸ்டு
சோஷியலிஸ்டு
ஜஸ்டிஸ் கட்சி
எல்லைப் பாது காப்புக் கமிட்டி
இணைப்புக் கமிட்டி

எனும் எல்லாம் ஈடுபடுகின்றன ஏதோ என்னிடம் கொண்டுள்ள 'சபலம்'பெரியாரை ஓரளவு தடுத்து நிறுத்தி யிருக்கிறது—அதுவும் நிரந்தரம் என்று கூறிவிட முடியாது

தொகையும், அடித்து நொறுக்கியவர்களின் எண்ணிக்கையும் மட்டும் தானா தெரிகிறது. பாபம்! அடக்குமுறையிடம் அழுத்தமான நம்பிக்கை வைத்திருக்கும் அன்பருக்கு, இதுதான் தெரிகிறது, நமக்கோ, நாட்டின் தன்மானத்தை, இனத்தின் எதிர்காலத்தை, மொழிவழி அரசுகோருபவரின் உரிமையை அழித்திட, எவ்வளவு உச்சக் கட்டத்தில் வீற்றிருந்து அரசோச்சுபவர் முயற்சித்தாலும், நாடு, எவ்வளவு சீறி எழுகிறது. கோழையும் வீரனாகி கோட்

எந்த பம்பாயில் நேரு பண்டிதர் வந்தால் 'ஜன சமுத்திரம்' கூடுகிறதோ, அங்கு இன்று, நேரு படத்துக்கே பாதுகாப்பு தேவைப்படுகிறதே!

துப்பாக்கி தெரிகிறதா என்று காமராசர் கேட்கிறார்—அதற்கு அஞ்சாமல் மார் காட்டி நின்ற மாவீரர்களை நாம் காட்டுகிறோம்.

தம்பி! துப்பாக்கிகளைத் தாண்டித்தான், தூய விடுதலைப் போர் வெற்றிகளைக் கண்டிருக்கிறது!! எந்தக் கொடுங்கோலனிடம் துப்

# பழைய காமராஜர் சிறிதளவு தெரிகிறார்.

பாக்கி இல்லை—எந்தக் கொடுங்கோலாட்சி துப்பாக்கியினால் காப்பாற்றப் பட்டிருக்கிறது!!

எனினும், காமராஜர் இதுபோல் பேசினதற்குக் காரணம், அவருக்கு ஏற்பட்டு விட்ட பீதி! ஆமாம்! வெற்றிகரமான பொதுவேலை நிறுத்தம் என்பது, ஆட்சியாளர்களுக்கு ஓர் அவமானச் சின்னம்!! அதை அறிந்துதான், முத்தான வாய்திறந்து முதலமைச்சர் பேசுகிறார்—சத்தான பேச்சல்ல, எனினும் அவருக்குச் சுவையான பேச்சு அது!

துப்பாக்கியைத் துரைத்தன மூலம் பெறுவதற்கு முன்பே, அவர், நம்முடைய 'கட்டைவிரல்களை' ஒட்ட வெட்டி விடுவேன் என்று பேசியவர்தான்!!

**தட்சிணப் பிரதேச யோசனையை வீழ்த்த**

**தமிழகம், மொழிவழி அரசாக**

**தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் தமிழ்நாட்டில் சேர**

**சென்னைக்குத் தமிழ் நாடு என்று பெயர் கிடைக்க**

இத்தனைக்கும் சேர்த்தே பிப்ரவரி 20!!

பொதுக்குழு, வாக்களித்துவிட்டது—நம்மை நம்பி, நாம் கடமையறிந்து, கண்ணியம் தவறாமல், அமைதி குலையாமல், பலாத்காரத்துக்குத் துளியும் இடமளிக்காமல், பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டுவோம் என்ற நம்பிக்கையுடன், பொதுச்செயலாளர், எல்லாக் கட்சியினருக்கும் வாக்களித்துவிட்டார்—சகல கட்சியினரும் கூடிய அந்த அவையில், சூள் உரைத்துவிட்டார்—உடன் இருந்து ஒப்பமளிக்கும் வாய்ப்பினை நானும் பெற்றேன்—பொதுக் குழுவும் ஏற்றுக்கொண்டது—எனவே, தம்பி! பொறுப்பு இனி உனக்குமெனக்கும்! புறப்படு! புறப்படு! பிப்ரவரி-20 வெற்றிகாண பணியாற்றப் புறப்படு!! இதோ நானும் புறப்படுகிறேன்!!

இந்தத் திங்கள் 12லிருந்து 15 வரையில், தமிழகமெங்கும் உள்ள தம்பிமார்களை (பொதுக் கூட்டத்தில் அல்ல) சந்தித்துப்பேச, வரக்கூடும் திட்டம், 'நம்நாடு' வெளியிடும்! தம்பி! நான் நேரில் வந்தால்தானா? இதோ என்வேண்டுகோள்! எனக்குத்தான்வீறுகொண்டெழுந்து ஏறுநடைபோட்டுப் பணியாற்றக் கிளம்பும், உன் உருவமே தெரிகிறதே, மனக்கண்முன்! பம்பாய்! பார்! பார்! என்றல்லவோ பயம் காட்டுகிறார் காமராஜர்!

நாம் யார்? என்பதைக் காட்ட வேண்டாமா? நாமென்ன, அடக்குமுறை கண்டஞ்சும் கோழைகளா? சாகத் துணியாத சடங்களா? உரிமையின் மாண்பறியா மரக்கட்டைகளா? தமிழரல்லவா நாம்! பிப்ரவரி 20ல் அதுதெரியட்டும், தம்பி! நன்றாக, ஆனால் அமைதியாக! பளிச்சென்று, ஆனால் பலாத்காரமற்ற வகையில்!

அன்பன்,

**அண்ணாத்துரை.**

## பாராட்டுகிறோம்!

சாதிகள் ஒழிய வேண்டும் என்று கும்பமேளாவுக்கும் குடந்தை 'மாமாங்கத்துக்கும்' போய்வரும் பண்டிதர்கள்கூடப் பேசுகின்றனர்-அவ்வளவு கவர்ச்சியூட்டுகிறது அந்தப் பேச்சு. நாட்டை ஆளும் தலைவர்கள், வெளிநாட்டுத் தலைவர்களிடம் 'வீரம்' பேசும்போதெல்லாம், அவர்கள், இங்குள்ள 'சேரி'யையும் அக்கிரகாரத்தையும், குலத்துக்கோர் நீதியையும் ஓரக்கண்ணால் பார்த்து உள்ளூரச் சிரிக்கிறார்கள்.

கலப்புத் திருமணத்துக்கு எதிர்ப்பு கூறுவாரின் எண்ணிக்கை மிக அதிகம்; வளர்ந்த வண்ணமுமிருக்கிறது; ஆனால் கலப்புத் திருமணம் செய்துகொள்வோரின் எண்ணிக்கையோ, மிகமிகக் குறைவு.

சாதியால் பீடிக்கப்பட்டுப் பாழாகும் இந்த நாட்டிலே, கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்கள், எத்தனை பெரிய புரட்சிகரமான, காலத்தை மாற்றிடும் அரிய செயலைச் செய்கிறார்கள், புதிய சமுதாயத்தை உருவாக்குகிறார்கள், என்பதனை உணரவும், அத்தகைய அரிய செயலாற்றுவோருக்குப் பாராட்டு தெரிவிப்பதுடன், சமுதாய எதிர்ப்பிலிருந்தும் கசப்பிலிருந்தும் பாதுகாப்பளித்திடவும், அவர்போல் ஏனையோரும் கலப்புத் திருமண மூலம், சமுதாயத்தைப் புதிதாக்க வேண்டும் என்ற நல்லார்வம் கொள்வதற்கும், சர்க்காரே முன்வந்து, சலுகைகள் வழங்க வேண்டும்.

காமராஜருக்கு இது கரும்பு என்கிறார்கள், அவரும் சாதி ஒழிப்பு மாநாடுகளில் பேசுகிறார்.

எனினும், இதற்கான அரும் பணியாற்றி வழிகாட்டும் வாய்ப்பு இதுபோது பீகார் பெற்றிருக்கிறது.

**'உயர்ந்த சாதி'யைச் சேர்ந்தவரொருவர் 'தாழ்ந்த சாதி' பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால் அவருக்கு-ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி உடனடியாக ரூ 2000 வழங்கப்படும். அவர்களுக்குக் குழந்தை பிறந்ததும் மேலும் ரூ. 1000 அளிக்கப்படும்.**

**'உயர்ந்த சாதி'யைச் சேர்ந்தவரொருவர் 'மலைவாசி'யை மணந்து கொண்டால் அவருக்கும் இந்தச் சலுகை வழங்கப்படும்.**

இதற்கான தொகையை பீகார் அரசு, பாட்னா பல்கலைக் கழகத்தாரிடம் ஒப்படைத்திருக்கிறது! கலப்பு மணம் செய்துகொள்ளும் பட்டதாரிகளுக்கு இந்தத் தொகையை வழங்குமாறும் தெரிவித்திருக்கிறது.

பாராட்கிறோம், சென்னையில் இதுபோன்ற முறை எழவேண்டும் என்று விரும்புகிறோம்.

★

**—முகப்பில்—**

தென்னகத்தின்
பறிபோகாத செல்வமான
நாதசுர இசையின்
ஒப்பில்லா மாணிக்கம்
இசைப் பேரும் புலவர்
**டி. என். இராசரத்னம்**
அவர்கள்
நண்பர் வேதாசலம் இல்லில்
நடைபெற்ற விழாவில்...

14-ம் பக்கத் தொடர்ச்சி

போர்ப்படையில் மருத்துவராகச் சில காலம் பணியாற்றினார்.

மீண்டும் கி. பி. 1537ல் மருத்துவத்தில் டாக்டர் (எம். டி.) பட்டம் பெற்ற பின்னர் லோவெயின் பல்கலைக்கழகத்தில் இரண சிகிச்சைப் பேராசிரியராகவும் உடற் கூற்றியல் இலாகாவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

அவருடையவிரிவுரைகள் கேலனைப் பின்பற்றியதாகவே முதலில் அமைந்தன. கேலன் கூறியவைகளைப் பரிசோதனைகளின் மூலம் மாணவர்களுக்குக் காட்டும் பொருட்டுத் தானாகவே மனிதப் பிரேதத்தை அறுத்து விளக்க முயன்றார். ஆனால் ஒவ்வொரு முறையும் கேலன் கூறியதற்கு மாறுபாடாக மனித உடற்கூறு இருப்பதைத் தானே காண நேரிடவும், அதைப் பற்றி ஆராய்ந்து, கேலனுடைய கொள்கைகளைக்காற்றில் பறக்கவிட்டு; தானே கண்டதும், மாணவர்களால் பார்க்கக் கூடியதுமானதையே, போதிக்க ஆரம்பித்தார்.

கேலனுடைய கொள்கைகளைப் பல பேராசிரியர்களும் அறிவாளிகளும் கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்தனர். ஆகவே வெசேலியசு, ஒரு விஞ்ஞானியின் கூற்றை அப்படியே ஆராயாது பின்பற்றாமல் ஒவ்வொருவரும் முயன்று ஆராய்ச்சி செய்து ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்ற ஓர் மறுமலர்ச்சியை விஞ்ஞான உலகில் உண்டாக்கினார்.

இம் முறையிலே தன்னுடைய 28-ம் ஆண்டு முடியுமுன் கி. பி. 1543ம் ஆண்டு "மனித உடலமைப்பு" என்ற புத்தகத்தை "De Human Corporis Fabrica" என்ற இலத்தீன் மொழித் தலைப்புடன் வெளியிட்டார். இந்நூல் இன்று வளர்ந்துள்ள உயிரியலுக்கு ஓர் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

வெசேலியசு தன் கருத்துக்களைக் கல்லூரியில் போதிக்க ஆரம்பித்துத் தன் புத்தகத்தை வெளியிட்டவுடன் ஒரு மாபெரும் எதிர்ப்புக் கிளம்பியது. வெசேலியசு பொய்யையும், தவறான கருத்துக்களையும் பரப்புவதாகமருண்ட மதத் தலைவர்கள் சீறினர். ஏன்! மருத்துவர்களே அவர் கூற்றை ஆராய்ந்து பார்ப்போம் என்ற பண்பின்றிக் கடுமையாகத் தாக்கினார்கள்.

வெசேலியசு கேலனின் கூற்றான "நாய் முதலிய பிராணிகள் போன்றே மனித உடலின்கீழ்தவடையும் பிரிவை உடையது" என்பதை மறுத்து, மனித உடலின் கீழ்த்தவடை ஒரே எலும்பினாலானது என்ற தன் கருத்தை வெளியிட்டார். மேலும் மார்பெலும்பு மூன்று பாகங்களையே உடையது என்றும், மனிதத் தொடையெலும்பு நாயின் தொடையெலும்புபோல் வளைந்திராமல் நேராக இருக்குமெனவும் கூறினார்.

கேலனுடைய கொள்கைகளை நிலை நாட்டும் பொருட்டுப் பல வேடிக்கையான வாதங்கள் தரப்பட்டன;...

வெசேலியசின் ஆசிரியர்களில் ஒருவரான சில்வியசும் அவரைக் கடுமையாக எதிர்த்தவர்களில் ஒருவராவர். அவர், "மனிதத் தொடையெலும்புகள் இயற்கையாக வளைந்துதான் இருக்க வேண்டும்; இதுவே கேலன் கூறியதாகும்; ஆனால், மக்கள் வெகு இறுக்கமான 'டிரவுசர்கள்' போட ஆரம்பித்து அதைத் தொடர்ந்து வந்ததால் இப்போது தொடையெலும்புகள் நேராக இருப்பதுபோல் தெரிகிறது" என்ற ஒரு விசித்திரமான வாதத்தைக் கிளப்பினார்.

மதவாதிகள், "ஆணுக்கு ஒரு பக்கத்தின் விலாவெலும்பு, ஒரு பெண்ணுக்கிருப்பதைவிட ஒன்று குறைவாக இருத்தல்வேண்டும்" என்றும், அதற்காதரவாக, "ஆதிமனிதன் ஆடமின் ஒருவிலாவெலும்பிலிருந்து ஈவ்-என்ற ஆதிப்பெண் தோன்றினாள்" என்றும் மதப் புத்தகத்தைச் சுட்டிக் காட்டினர்.

"மருட்டுகின்ற மதத் தலைவர் வாழ்கின்றார்"...என்ற புரட்சிக் கவிஞன் வாக்கு நினைவுக்கு வருகின்றது நமக்கு.

மதவாதிகள், ஆராய முற்படாத பல பேராசிரியர்கள், கேலனுடைய கொள்கையைப்பற்றிச் சந்தேகிப்பதே பாவம் என்ற கொள்கையைப் பின்பற்றிய மருத்துவர்கள், இவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து வெசேலியசைக் கடுமையாகத் தாக்கினர். தைரியமாக தன்னெண்ணத்தை வெளியிட்ட வெசேலியசு, இக்கண்மூடித்தனமான எதிர்ப்பைக் கண்டு மனம் வெதும்பித் தன் பேராசிரியர் வேலையினின்றும் நீங்கி 19 ஆண்டுகள் ஐந்தாவது சார்லசு மன்னன் காலத்திலும், இரண்டாவது பிலிப் மன்னன் காலத்திலும் அரசாங்க வைத்தியராக இருந்து, பின்னர் 1563ம் ஆண்டு ஜெருசலத்திற்குப் பயணமானார்.

அங்கிருந்து திரும்புகையில் கப்பல் உடைந்து ஐயோனியன் தீவுகளில் ஒன்றான காண்டி என்ற தீவில் ஒதுக்கப்பட்டு அதன் விளைவுகளால் உயிர் நீத்தார்.

ஆகவே சிந்தனைச் சிற்பிகளுக்கு ஏற்பட்ட நிலை வெசேலியசுக்கும் ஏற்பட்டது. சாக்ரடீசுபோன்று கொல்லப்படாவிட்டாலும் துரத்தப்பட்டு மனம் வெதும்பிய நிலையில் அனாதையாக உயிர் நீத்தார்.

இன்றைய உயிரியல் வளர்ச்சிக்கே தன்னுடைய உயிரைப் பணயமாக வைத்தார் என்றால் தகும். உயிரியலும் மருத்துவமும் ஆச்சரியகரமாகப் பல வகைகளில்முன்னேற்றமடைந்துள்ள இந்நாளில் இன்றைய உயிரியல் விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் வெசேலியசுக்குத் தலைவணங்கத்தான் வேண்டும்.

அறிவியக்கப் புலமைகண்ட நாடுகள் வாழும்வரை அவர் புகழ் வாழத்தான் செய்யும்.

★

**—கடைசிப் பக்கம்—**

சென்னை நண்பர் S. S. P. லிங்கம் (வேதாசலம்) அவர்களின் குமாரிகள் மணிமேகலை, அழகுராணி இருவருக்கும் அண்ணாதுரை தலைமையில், 25—1—56 அன்று எழுத்தறிவித்தல் விழா சிறப்பாக நடைபெற்றது.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

# கவிதை அரங்கம்

"அப்படியா அப்பெல்லஸ்." என்று வேந்தன்
அருமந்த நண்பனது அருகில் சென்று
"ஒப்பில்லா ஓவியத்தை வரைந்துத்தந்த
உயிர்நண்பா உன்னிடத்தில் சொல்வேன் [அவளும்
உப்பல்ல வாளத்தன் உணவுக் கென்றே
உரைத்திட்ட அந்நாளை மறந்தாபோனாய்?

இப்புவியில் அவளெனக்கு உயிர்தான் எனினும்
எடுத்துக்கொள் நீயவளை, மேலும் ஒன்று
செப்பிடுவேன் செவிமடுத்துக் கேட்பாய் நண்பா!
சித்தத்தில் நீகொண்ட கருத்தை இன்று
அப்படியே என்னிடத்தில் எடுத்துச் சொன்ன
அப்பப்பா உன் துணிவை போற்று கின்றேன்
எப்படியோ...? நீயவளை எடுத்துக் கொள்வாய்
எனக்கந்த ஓவியமே போதும்" என்றான்.

சா. இராமாநுசம்,
இரட்டணை.

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான் மன்னன்
அலக்சாண்டர் தன்னிடத்தில் உணர்ச்சியோடு
அப்படியா அப்பெல்லஸ் என்று வேந்தன்
அடிபட்ட பாம்பென சீற்ற முற்று
"ஒப்பில்லா எழிலுடைய அவளை உந்தன்
உள்ளத்தில் ஏற்றிட்டாய் அணைக்கவேண்டும்
இப்போதே மடிவாய் நீயும்" என்றே
இறுத்திட்டான் போர்வாளை கலைஞன்நெஞ்சில்.

அன்பினெளி,
கட்டிமேடு.

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான் மன்னன்
அலெக்ஸாண்டர் தன்னிடத்தில் உணர்ச்சி யோடு
'அப்படியா அப்பல்லெஸ் என்று வேந்தன்
ஆச்சரியத்தால் கல்லாய்ச் சமைந்து போனான்!
ஒப்பில்லா ஓவியனும் உடல் நடுங்க
உணர்வெல்லாம் ஒன்றிவிட அருகில் நின்று
தப்பிதமா நான்செய்த செய்கை யென்று
தன்னைத்தான் கேட்டுக்கொண் டிருந்தான் அங்கே!

ஓவியத்தைத் தான்வரையச் சொன்னேன்; அந்த
ஒண்டொடியா ளைக்கொள்ளவா சொன்னேன்? இன்பக்
காவியத்தைத் தானெழுதச்சொன்னேன்; காதல்
களிப்புக்கா அனுமதித்தேன்? நன்று! என்றான்

நாவினோர் அனுவுக்கும் உயிரை வாட்டி
நசுக்கிடுமோர் திறனுண்டு எனினும் இந்த
ஓவியனே என் நண்பன் அவனுக் கந்த
உயிர்ச்சிலையைக் கொடுத்துயிரை மீட்டல் [வேண்டும்!

செம்புன்னாள் கம்பாஸ்பி மனது இந்தத்
திருமிக்கான் ஓவியத்தில் ஆழ்ந்து காதல்
அம்புவிக்கோ ஏகியது? ஈண்டு வாழும்
அறிவையர்கள் மனதென்னே—என்று [எண்ணிக்

கம்பனியில்லான் குளிரில் நடுங்கல் போல
காத்திருக்கும் கலைஞனிடம் சொல்வான் " நண்ப!
கம்பாஸ்பி உனக்காவாள் எனினும் என்றன்
கட்டளையும் ஒன்றுண்டு அறிவாய் நீயும்"—
அடுத்த கணம் என்சொல்வேன் என்று ஏங்கும்
அக்கணமே தொடர்ந்திடுவான் மன்னன்! 'நானும்'
எடுத்த ஒரு உறுதியினால் கிரைநாடு
எல்லாமும் வென்றிடுமோர் ஆவலாலே
எடுத்தடியைக் கீழ்த்திசையில் வைத்துச்செல்வேன்—
என்னுயிரும் போர்க்களத்தில் நீங்குமாகில்
அடுத்தகணம் கம்பாஸ்பி மலரைக் கொள்ளல்
அப்பெல்லஸ் உனக்கேதான் ஆகும் உன்றன்
துடிக்கின்ற இதயத்தால் அதற்கு முன்னர்
தொட்டிடுவை யாயினுயிர் நீங்கும்! நானும்
விடுக்கும்மடல் தனைக்கண்டு ஏந்திழையை
மேற்கொள்வாய்—கம்பாஸ்பி கட்டளைக்குள்
விடுக்கின்றேன் என்னுயிரை மெய்காப் பாளர்
விட்டகலா படியிருப்பர் உன்னை; என்றன்
துடிக்கின்ற நெஞ்சத்தில் பேச்சு இல்லை—
தொடராதே என்றுரைத்து நீங்கிச் சென்றான்!

ப. தாமரைச்செல்வன்,
காளியாபுரம்.

RAMAMOORTHY. M. O. L.

★

## மகிழ்ச்சி

'பொங்கல் மலரில்' தோழர் சுரதா தீட்டிய 'அலெக்ஸாண்டர்' எனும் கவிதையின் முடிவை, எழுதியனுப்புமாறு கேட்டிருந்தோம், ஏராளமானதோழர்கள், சுவை சொட்டும் தமிழில், கவிதைகள் அனுப்பியுள்ளார்கள். நன்றி. இனிமேல் அனுப்புதல் வேண்டாம் எனக்கேட்டுக்கொள்ளுகிறோம். இதுவரை அனுப்பியவர்களின் 'முடிவு'கள் தொடர்ந்து, இதழில் வரும்.

— ஆசிரியர்.

